# சுதேசமித்திரன்

5—9—48

விலை 4 அணா



THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY






இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுடவார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

# WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

# சக்தி ஆருடம்!

சென்னை சர்க்கார் மீன் இலாகா, கெஜட்பதவி உத்தியோகத்திலிருக்கும் Sri S. V. கணபதி (Hydrologist) 7-6-'48ல் எழுதுகிறர்:—"தங்கள் பலன்கள் ஆச்சரியமானவை. பலன்களில் மிகவும் திருப்தி."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

**சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)**

# பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலே, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

**Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**
**11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.**

| கும்பகோணம் கிளை:— | திருச்சி கிளை:— |
| --- | --- |
| 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி | 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு. |

## குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷிமி பிரசாதம்

# (லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

**40 நாட்களில் குணம்**

| தலைமை ஆபீஸ்: | லக்ஷிமி & கோ., |
| --- | --- |
| வாஸ்டேர். ஆர். எஸ். | 2/135, பிராட்வே, மதராஸ். |




சகல விதமான பட்டு & நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

# ராம்ராஜ்யா ஹால்

**N.R. ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி... சேலம்**

**வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்**



**ஸித்தமகரத்வஜம்**
(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 80 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

**மஹாபில்வாதி லேகியம்**

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிறு கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

**ஸ்ரீ தன்வந்திரீ கவசம்**

வியாதி, மனோவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வத்ரம், ஸ்ரீதன்வந்தரீ யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

**ஆனந்த படை நிவாரணி**

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

**ஆனந்த பற்பொடி**

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

**வைத்திய ஸித்தாச்ரமம்**
**பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்**




"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையும் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம் 40-நாள் மருந்து ரூ. 3-12-0.

பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

**ஜமதக்னி ஔஷதாலயா,**
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

# Rgd. No. 2221.

S.A.H. TRADE MARK

28 வருஷமாய் தென்னடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

## சேலம் மூன்று தாமரை பீடிகளை

**உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.**

**Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.***



# ஆனந்த குஸுமாகர லேகியம்

**துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!**

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

## மலையாள மெடிகல் ஹால்

**H. O. TRIVANDRUM**

**189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.**

**கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.**



## ஜாதகம் ! ஆருடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

**Lt. Col. M. N. C.** ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

**'மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)**





# பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி **கேசவர்த்தினியை** கொண்டு பெறுங்கள்.

மூக்கையும், மோவாய்க் கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால், கூந்தலையோ விதவிதமாயும், விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர் **கேசவர்த்தினியின்** உதவியால் அபரிமிதமான கூந்தலைப்பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், **கேசவர்த்தினி**யினால் கூந்தலையும் அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணு 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

*தயாரிப்பவர் :*

**தென் இந்திய ரஸாயன சாலை,**

**"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,**

பவர் ஹவுஸிற்கு அடுத்தது

**கோயமுத்தூர்.**

## முக்கிய அறிவிப்பு

**மந்தார விடு இலை,**
**தையல் இலை**

சகாயமான விலைக்கு மொத்த
மாகவும், சில்லரையாகவும்
எங்களிடம் கிடைக்கும்.

**S.மாணிக்கம்செட்டி கோ.,**
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.
ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு
ஏஜண்டுகள் தேவை.

**கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்**
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை
**வெளிவந்து விட்டது!**
வாசனை பாக்குத்தூள்
காலணுவுக்கு இரண்டு.
சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை,

தயாரிப்பவர்:
**மாணிக்க விலாஸ்**
11 பீட், மதராஸ் 1.



## எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும்
ஆரோக்கியமானது

# P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை-கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து-பஞ்சாபிதேன் - முத்து பன்னீர்-ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—
**மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,**
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.


## ஸ்ரீமத்பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத
காலேஜ் உபாத்தியாயராய்
இருந்த கீர்த்தனசார்ய
ஸி. ஆர்.
ஸ்ரீனிவாஸய்யங்கார் பீ. ஏ.
எழுதியது.

மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப்பட்டது.

★

முழுகாலிகோ பயிண்டு
செய்தது.

**விலை ரூ. 3-8-0**
(தபால் செலவு 0-8-0)
இன்னும் இதர புத்தகங்களும்
கிடைக்கும்.

★

எமது எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ் செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

★

புத்தக ஜாபிதாவுக்கு
எழுதவும்.

★

மானேஜர்,
**சுதேசமித்திரன் ஆபீஸ்**
மவுண்ட்ரோடு, மதராஸ்.





கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
**பட்டு & நூல்**
ரவுகி ரகங்கள் சரசமாய்
கிடைக்கும் இடம்
# ராம விலாஸ்
S.N.ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.



ஸ்தாபிதம் 1924.
## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராயநகர், மதராஸ் 17.

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

## தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

## அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினால் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி

**R.M. நாராயணசாமி பிள்ளை**

தன்வந்திரி வைத்தியசாலை,

பழனி. (S. I.)



டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி




லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

## ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்,

**ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்**

**37, மண்ணடி, மதராஸ்.**


## பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன, ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும், தபால் செலவு ப்ரத்தியேகம்,

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

மவுண்ட் ரோடு, சென்னை.


வாரியர்

## பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

**கே. எஸ். வாரியரின்**

## அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)


## காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம் „ ரூ. 2.

மூன்றாம் பாகம் „ ரூ. 2.

(தபாற் செலவு அணா 10.)

V. P. அனுப்புவது கிடையாது.

சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.




## 501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.


## கட்டுரையாளருக்கு

★

'சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள். ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரிஞு ஆவணிமீ 21உ ★ 1948-ஞு செப்டம்பர்மீ 5உ No. 32

# ஆந்திரர் கோரிக்கை

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி பாஷாவாரி மாகாணக் கமிஷனுக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துளது. அதில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களும், வாதங்களும், ஆந்திரர்கள் கோரி வரும் பாத்தியதைகள் எவ்வளவு அசட்டுத்தனமானவையென்பதைத் தெள்ளென ருசுப்படுத்தும். வீணான பிரமையைப் போக்கவும் அது உதவும்.

சென்னை நகரம் தங்களுக்குச்சேரவேண்டியதென்று ஆந்திரர்கள் பாத்தியதைகொண்டாடுகிறார்களல்லவா? ஜீவனத்துக்காக இங்கு எங்கெந்த பகுதியிலிருந்தெல்லாமோ பல ஜாதியார் வருகிறார்கள். அவர்களெல்லாம் சென்னையைத் தங்களுடையதென்று கோரி உரிமை கொண்டாடினால் எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தம்தான் ஆந்திரர்களின் இக்கோரிக்கையும். தமிழ்நாடு காங்கிரஸ் கொடுத்திருக்கும் புள்ளி விவரம் இத்துறையில் நிலைமையை நன்குதெளிவுபடுத்தும். தமிழ்நாட்டு மக்கள் நிறைந்த செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள கிராமங்களால் சிருஷ்டிபெற்ற இந்த சென்னை நகரம், நிர்வாக வசதியின் பொருட்டு ஒரு பிரத்யேகக் கலெக்டரின் கீழ் பிரித்து ஒப்புவிக்கப்பட்டது.

சென்னையில் வசிக்கும் ஜனங்களின் பாஷாவாரிக் கணக்கிலிருந்தும் ஆந்திரர் கோரிக்கையின் அர்த்தமற்றதன்மை விளங்கும். 1931-ம் வருஷத்தில்தான் இது குறித்துப்புள்ளி விவரம் திரட்டப்பட்டது. அதன்படி நகரில் வாழ்ந்த தமிழர் 4 லட்சத்துக்கதிகம்; ஆந்திரர் தொகையோ $1\frac{1}{4}$ லட்சத்துக்கும் குறைவு. இதிலும் தெலுங்கும், தமிழும் கலந்து பேசக்கூடியவர்கள் சேர்ந்திருக்கின்றனர். ஜனத்தொகை இப்போது பெருகியிருப்பதாகச் சொல்லலாம். இது ஆந்திரர்களால் மட்டும் பெருகிவிடவில்லை. அவர்களைவிட 4 மடங்கு அதிகமாயிருந்த தமிழர்கள் தொகையும்தான் கூடப்பெருகியிருக்கிறது.

ஆந்திரர்கள் சென்னை நகரத்தைமட்டும் கேட்கவில்லை. அதற்கும், ஆந்திரப் பிரதேசத்துக்கும் இடையேயுள்ள பகுதிகளிலும் உரிமை கொண்டாடக் கிளம்பியிருக்கின்றனர். அப்பகுதிகள் அவர்கள் வசமானால்தான் ஆந்திரப் பிரதேசத்துக்கும், சென்னை நகரத்துக்கும் ஒரு தொடர்பு ஏற்படக்கூடும். அதற்காக அப்பகுதிகளில் ஆந்திரர் தொகை பெரும்பான்மை என்று அவர்கள் கதை கட்டவும் கூசவில்லை. சென்னை தங்களுக்குரியது என்ற ஒரு புரட்டைக் கிளப்பியபின் அதைத் தாங்க ஒன்றன்பின்னொன்றாக வேறு பல புரட்டுகளையும் அவர்கள் புனைந்தாக வேண்டியிருக்கிறது. அவர்கள் கோரும் பகுதிகளில் அநேகமாக எல்லாமே முற்றிலும் தமிழர் மயமானதென்பதை தமிழ்நாடு காங்கிரஸ் உத்தியோக பூர்வமான புள்ளி விவரங்களுடன் பட்டவர்த்தனமாக்கியிருக்கிறது.

சென்னை விஷயத்தில் தங்கள் கோரிக்கை செல்லாதென்பதை ஆந்திரரும் உணர்ந்திருக்கவேண்டும். ஆதலால்தான், அதைத் தங்களிடம் கொடுக்காமல் போனால், அதை ஒரு தனி மாகாணமாக்கிவிட வேண்டுமென்று அவர்கள் கூச்சல் போடுகின்றனர். பெரிதும் தமிழர் மயமான, தமிழர் முயற்சியின் விளைவான, தமிழ்நாட்டுக்கு இயற்கையாக அமைந்த தலைநகரான சென்னையை இழக்க தமிழர் இசைய முடியாது.

இத்தகைய அபத்தக் கோரிக்கைகள் வெளியிடுவதில் சில கன்னடப் பிரமுகர்களும் ஆந்திரர்களுடன் போட்டியிடக் கிளம்பியிருக்கின்றனர். கோவை, நீலகிரி ஜில்லாக்களில் பங்கு கேட்கும் அப்பிரமுகர்களுக்கு

—அடுத்த பக்கம்

அங்குதமிழரே மிக்கப் பெருவாரியானவர்களென்பது புரியாதது மட்டுமில்லை; அப்பகுதிகளுக்கும், கர்னாடகத்துக்கும் நேரடியான தொடர்பு கிடையாதென்பது கூடப் புலனாகவில்லை. ஆந்திரர், மலையாளிகள், கன்னடக்காரர் ஆகியவர்கள் தங்களுக்கு வேண்டிய பகுதிகளையெல்லாம் எடுத்துக்கொண்டது போக, மிஞ்சும் பிரதேசந்தான் தமிழ் நாடாயிருப்பது என்பது பரிகசிக்கத் தக்கதாகும். இந்த விபரீதக் கருத்துக்கு இடந்தரும் எண்ணம் சிறிதும் தங்களுக்கில்லையென்பதை மத்தியசர்க்கார் உடனேயே தெளிவாக்குவது அவசியம். தொடர்ச்சியாகத் தமிழர் மயமாயுள்ள பிரதேசங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்துத் தமிழ் மாகாணமாக்குவது பாஷாவாரி கமிட்டியின் அலுவலில் ஒரு திட்டமான பகுதியாக அமைய வேண்டும். தெற்கே குமரி முனையையும், வடக்கே திருவேங்கடத்தையும் எல்லையாகக் கொண்டு இம்மாகாணம் அமைவதே முறை. வட வேங்கடமுள்ள சித்தூர் முன்பு வட ஆற்காடு ஜில்லாவின் ஒரு பகுதியாகவே இருந்ததென்பதை தமிழ்நாடு காங்கிரஸ் சுட்டிக்காட்டியிருக்கிறது.




சென்னைக்குப் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் பவநகர் மகாராஜாவிடம் பதவியை ஒப்படைத்துவிட்டு செல்லும் ஸர் ஆர்ச்சிபால்டு நை இம்மாகாணத்தவரின் நன்மதிப்புக்குப் பெரிதும் பாத்திரமாக நடந்துகொண்டார். இந்த சித்திரத்தில் ஸர் நை கையொப்பத்தைப் பெறுமுன்பாக அவரது மனைவி மே. த. லேடி நை, சித்திரக்காரரிடமிருந்து படத்தை வாங்கி, மூக்கைமட்டும் சிறிது திருத்திச் சரிப்படுத்திக் கொடுத்தார். தமக்குச் சித்திரமெழுதுவதிலுள்ள சிரத்தையையும் அவர் தெரிவித்தார்.

தற்போது மிக அவசரமாகக் கவனித்தாக வேண்டிய பல பிரச்னைகளை முன்னிட்டு, பாஷாவாரி மாகாணங்கள் ஏற்படுத்தும் வேலையை பத்து வருஷ காலம் ஒத்திவைக்கலாமென்று ஒரு யோசனை கிளம்பியிருக்கிறது. ஒருலட்சியத்திலுள்ள மோகத்தில் பிரத்தியட்ச நிலைமையைப் பார்க்க மறுப்பது அறிவுடைமையன்று. பாஷாவாரிப் பிரச்னையைவிட இன்னும் அவசரமாகச் சமாளித்தாக வேண்டிய பல பிரச்னைகள் இப்போது முனைத்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. இதொருபுறமிருக்க, பாஷாவாரிப் பிரச்னை தற்போதைய நிலையில் முற்றிலும் திருப்திகரமாகத் தீர வழியில்லையென்பதும் தெளிவாகும். அண்டையிலுள்ள திருவாங்கூர், மைசூர், ஹைதராபாத் சமஸ்தானங்களையும் பற்றிய விஷயம் இது. சமஸ்தானாதிபதிகள் இணங்கி வரும்வரை இவ்விஷயத்தை ஒத்திப் போடுவதா என்று யாரும் வெகுளவேண்டியதில்லை. சென்ற ஒருவருஷகாலத்தில் சமஸ்தானாதிபதிகள் விஷயத்தில் ஏற்பட்டுள்ள அற்புத மாறுதலைக் கண்டபின், பாஷாவாரிப் பிரச்னையைத் தீர்ப்பதிலும் சமஸ்தானங்கள் நம்முடன் ஒன்றுபடும் நாள் விரைவில் வருவது பற்றி யார்தான் அவநம்பிக்கை கொள்ளக் கூடும்? ஆகவே இப்பிரச்னையை சிறிது கால மேனும் தள்ளிப்போடுவதுதான் நேர்மை.

# கணபதியே வருக!

வி. பி. புருஷோத்தமன்

ஆனை முகமாய்ப் பிறந்ததனால்
அய்யோ கவனிப் பாரற்று
மோன உருவாய் நடுத் தெருவில்
மூங்கை போல அமர்ந்திருக்கும்
ஞான நாதா, கணபதியே!
நலிவைத் தீர்க்கும் தயநிதியே!
பேணுகின்றோம். நீ வருக!
பிள்ளாய் வருக, வருகவே!
மீனை யொத்த விழி யாலும்,
மின்னை யொத்த இடையாலும்,
தேனை யொத்த மொழியாலும்
செவ்வேள் தம்பியை மயக்கிவிட்ட
மானை யொத்த வள்ளியினை
மணஞ்செய் வித்த கணபதியே!
ஆனை முகத்துடன் வருகவே!
அன்பே வருக, வருகவே!
கள்ளக் கடையின் அரிசியினால்
கனத்த கொழுக்கட்டை சுட்டோம்,
எள்ளை வாங்கிப் படைத்திட்டோம்
எருக்க மாலை சூட்டிட்டோம்.
தொல்லை தீர்க்கும் கணபதியே!
துணையாய் நிற்கும் தயநிதியே!
ஒல்லை நீ, வா! உடனே வா!
உண்பாய் வருக, வருகவே!
பார்வதி தேவிப் பாலகனே!
பத்திரம் வாங்கிச் சமர்ப்பித்தோம்,
சேர்மித தடையும் பின் சேர்த்தோம்.
திரிந்து பழங்கள் படைத்திட்டோம்.
ஏர்மித துணைவா, கணபதியே!
இன்னல் தீர்க்கும் தயநிதியே!
வார்கழல் ஒலிக்க வருகவே!
மைந்த! வருக, வருகவே!

( வேறு )

எங்கள்விதி எட்டவுஞ்சு 'ரேஷன்' ஆச்சு!
இறைவனே! உன்பங்கும் குறைந்து போச்சு!
பொங்கிடவே செய்திடுக, நெல்லை யெல்லாம்!
பொருளெல்லாம் எங்கெங்கும் விளையச் செய்க!
தங்கிடவே எல்லோர்க்கும் வீடு வேண்டும்.
தரித்திடவே எமக்கெல்லாம் துணியும் வேண்டும்!
மங்காத பெருங்கல்வி வேண்டும்! வேண்டும்!!
மகேச்வரா, உன்றனையே வேண்டினேமே!

# மனிதத்தன்மை

(சுகி)

பத்திரிகையில் வந்த இச்செய்தியைப் படித்தபோது எனக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.

பம்பாயைச் சார்ந்த சிவஸ்வாமி முதலியார், ஆசிரியருக்குக் கடிதங்கள் புனைப்பெயரில் எழுதுகிற பழக்கமுள்ளவர். போஸ்ட் மாஸ்டருக்கு நாலணா ஸ்டாம்பு அடக்கம் செய்து ஒரு கடிதம் எழுதினார்:

தபால் ஆபீஸில் பொது ஜன உபயோகத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் மையை எனது பவுண்டனுக்கு ஊற்றிக்கொள்வது வழக்கம். அதற்காக நாலணா ஸ்டாம்பு அடக்கம் செய்திருக்கிறேன். தாங்கள் வைத்திருப்பது உண்மையில் மையாக இருந்தால் இன்னும் அதிக ஸ்டாம்பு வைத்திருப்பேன்.

அந்தப் போஸ்டு மாஸ்டர். ரஸனை இல்லாத பேர்வழியாக இருந்தால் சிவஸ்வாமி முதலியாரவர்களை வம்பில் இழுத்து அபராதம் வாங்க முயற்சித்திருப்பார். சிவஸ்வாமி முதலியாரவர்களும் பொதுஜன நன்மைக்குத்தானே ஆசிரியருக்கு கடிதங்கள் எழுதுகிறார்கள். பொதுஜன நன்மைக்கு வைக்கப்பட்ட மையை. பொதுஜனங்களின் நன்மைக்கே தாம் பயன்படுத்தியதாகவும் வழக்கப்படலாம். ஆனால் வழித் தேங்காயை எடுத்துக் கடைப் பிள்ளையாருக்கு உடைக்கலாமா? இது வேறு விஷயம்.

எனக்கு இந்த மாதிரி செய்திகள் வருகிறபோதெல்லாம் மனுஷத்தன்மை இன்னும் உயிருடன் ஒட்டிக்கொண்டிருக்கிறது, அழியவில்லையென்ற நம்பிக்கை பிறக்கும். தாம் செய்தது பொதுஜன சேவை என்றாலும் அதற்குப் பணம் கொடுக்காமல் இருந்தது தவறு என சிவஸ்வாமி முதலியாரவர்கள் நினைத்துவிட்டது ரொம்ப நியாயம்.

இதனால், நிர்ப்பந்தத்துக்கு ஆளாகாமலே நேர்மையைக் கடைப்பிடிக்கிறவர்களும் இந்த 48-ம் வருஷத்தில் உயிரோடு இருப்பதை அறிகிறோம். எனக்குத் தெரிந்த கணக்கர் ஒருவர் ‘கடைகளில் மூன்று வகை கணக்கு உண்டு. ஒன்று கடை நடத்துகிறவர் சொந்தக் கணக்கு. இன்னொன்று பங்காளிகளுக்குக் காட்டும் கணக்கு. மூன்றாவது கணக்கு வருமான வரி ஆபீசுக்கு’ என்று சொல்லுவார். அதாவது பத்தாயிரம் லாபமென்றால், பங்காளிக் கணக்கில் ஐயாயிரம் காட்டி வருமான வரிக் கணக்கில் இரண்டாயிரம் காட்டப்படுமாம்! மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல், வருமான வரியைக் கொடுக்கிறவர்கள் நம்மில் எத்தனை பேர்?

எப்படியோ அரசாங்கத்திற்கோ, அடுத்தவனுக்கோ பணத்தை நாமஞ் சாற்றிவிடவே மனித எண்ணம் தூண்டுகிறது. அரசாங்கத்திற்கு நியாயமாக வர வேண்டிய வருமான வரி வரவில்லையெனச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நாமும் காது குளிரக் கேட்டுக்கொண்டே, கை குளிரக் கணக்கு எழுதுகிறோம். கொஞ்ச நாட்களுக்குமுன். இங்கிலாந்தில் ஒருவர் ஒரு லக்ஷம் பவுன் நன்கொடையளித்தார். அவரைப் பேட்டி காணவும் பத்திரிகைகளில் பாராட்டவும், நிருபர்கள் தேடித் தேடி அலைந்தும் ஆசாமி யார் என்றே தெரியவில்லை. தான் கொடுத்த நன்கொடை அநாமதேயமாகப் போவதில் அந்தக் கொடையாளிக்கு அவ்வளவு ஆசை! தன்னை உலகத்திற்குத் தம்பட்டம் அடித்துப் பறைசாற்ற நினைக்கவில்லை. இது மேலோர்களின் பண்பு. வலது கை செய்கிற தருமம் இடது கைக்குத் தெரியக்கூடாது என்றார்களே, அப்படிப்பட்ட ரகத்தைச் சேர்ந்தவர் லக்ஷம் பவுன் வழங்கியவர்.

பண விஷயம் என்று வருகிறபோது மனுஷ யோக்யதையை உரை கல்லில் இழைக்கத்தான் வேண்டும். பத்தரை மாற்றுகள் கிடைப்பது துர்லபம். ஐந்தேகால் மாற்றுத்தான் தேறும். தேசங்களுக்குத் தேசம் லக்ஷக்கணக்காக கடன் வாங்கிக்கொண்டு, சால்ஜாப்பு சொல்லுவதை நாம் அறிவோம். தனி மனிதர்கள் அப்படி முடியுமா? தனி மனிதர்கள் நாணயமாக நடக்க முடியாவிட்டாலும், நடப்பது போலப் பாவனை செய்கிறார்கள். கடன்காரனுக்கு இல்லையெனச்சொல்லுகிறவர்களை விடத் தருகிறேன் தருகிறேன் என்றாவது சொல்லி வருகிறவர்கள் மேல். இல்லையென்றால் நம்முடைய ஒழுங்கு போச்சு. வருஷக் கணக்காக கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கலாம். ‘கடன் கேட்காமல் கெட்டது; பயிர் பார்க்காமல் கெட்டது’ என்பதுபோல அலுப்பு ஏற்பட்டு நின்று அடைபடாமல் நின்றுவிடும். ஆனால் கடனை தகப்பனார் பெற்றிருந்தாலும் அடைப்பதே தமது கடன் என சி. ஆர். தாஸ் செய்தார் எனப் படிக்கிறபோது நமக்குப் பிரமிப்புத் தட்டுகிறது. வக்கீல் தொழில் செய்து, வட்டிபோட்டு கொடுப்பதே தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என்றால். மனிதத் தன்மை, என்றும் அழியாது என்ற உண்மையை அறிகிறோம்.

இந்த யுத்தம் வந்த பிறகு, முதன் முதலாகச் செத்தது நாணயம், நம்பிக்கை; எந்தச் சரக்கிலும் போலிகளை வைத்தே ஏமாற்றப் பழகினார்கள். உருளைக் கிழங்கு போண்டா எனக் கரும்பலகையில் எழுதியிருப்பார்கள்.

போண்டாவில் உருளைக்கிழங்கு தவிர எல்லா மண்ணாங்கட்டியும் இருக்கும். மாவு தோசை என்றால், இலையென்றால், வாழ இலை என்ற மரபு போல, அரிசி மாவுத் தோசையாக இருக்காது, சோள மாவு, கேழ்வரகு மாவு, பார்லி மாவு, எப்படி ஏதாவது ஒரு

மாவுத்தோசை. ஓட்டல்களில் மட்டுந்தானா இந்த ஏமாற்றமும், போலியும்? சகல வியாபாரத்திலும் தில்லுமல்லுகள். பொய் பித்தலாட்டம். ஏமாற்று வித்தை. ஒரு பொருளுக்கு மாறு பெயர் கொடுத்து விற்பதே குலதர்மமாக வைத்துவிட்டார்கள்.

போன வாரம் கடைவீதியில் போய்க்கொண்டிருந்த என்னிடம், 'சார், வெள்ளிப்பித்தான். செட் ஒரு ரூபாய்' என்று ஒருவர் சொன்னார்.

'ஏனப்பா, கறுக்குமா?'

'கறுக்காது சார், வெள்ளி'.

'ரொம்பப் பகட்டா இருக்குதே.........'

'அசல் வெள்ளி கெட்டுது போங்க'.

எப்படி இருக்கிறது வியாபார முறை? நான் திரும்பி வரும்போது அதே ஆசாமி, அணவுக்கு மூன்று வீதம் விற்றுக் கொண்டிருந்தான். இதனால் உண்மையை நாம் சந்தேகிக்க வேண்டியதாகிறது. இந்த நாள் வியாபாரம் மினுக்கும் தளுக்கும் நிறைந்தது. ஆதி நாளில் நகைகள் செய்தால் உளி உளியாக மூன்று தலைமுறைக்கும் நகை இருக்கும். இந்த நாளில் அடுத்த பாஷன் வருவதற்குள் நகையே தற்கொலை செய்து விடுகிறது. அழகும் ஆடம்பரமும் பகட்டாகவும், பெங்கால் சில்க் நாகரிகம்போலவும் பரவி விட்டன. இந்த நாகரிகம் புஸ்தகங்களையும், பத்திரிகைகளையும் கூடத்தொத்தியுள்ள புதியநோய். பெண்களுக்குத்தான் வர்ணத்திலும் வனப்பிலும் மோகம். ஆண்கள் படிக்கும் பத்திரிகைகளுக்கு இப்படியேன் வர்ண விசித்திரங்கள். கண் கொள்ளாக்காட்சி வரிசைகள். நிறங்களின் சம்மேளனங்கள் சொல்லி முடியாது. எனக்குத்தெரிந்த ஒரு பத்திராதிபர் வெளி ஆடம்பரம், மூவர்ண அட்டைப்படம் பிடிக்காதவர், தமது பத்திரிகையில் மூவர்ண சம்மேளனங்களை நிரப்பி வைத்திருந்தார்.

'ஏனய்யா. இந்த வம்பு?'

'மூவர்ண' அட்டை போடாவிட்டால் ஏஜன்ஸியை ரத்து செய்துவிட்டேன்–அறியவும். இப்படி எல்லா ஏஜண்டுகளும் எழுதிவிட்டார்கள்.'



தேமதுரக் கவிதைகளை இயற்றித் தந்த அமரகவி ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியாரின் சிராத்த தினம் ஸெப்டம்பர் 11-ந்தேதி. அவரது தீஞ்சுவைக் கீதங்களைத் தமிழர்கள் நிறைந்த ஒவ்வொரு பகுதியும் பாடிப் பரவசப்படும் நாள் அது.

'அப்படியானால், நீங்கள் ஏஜண்டுகளுக்காக பத்திரிகை போடுகிறீர்களா, இல்லை வாசகர்களுக்காகப் போடுகிறீர்களா?'

'பெண்கள் புடவைக் கடையில் நேரம் போக்குவது போல–வாசகர்கள்–பத்திரிகைக் கடையில் மொய்க்கிறார்கள் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா?'

முன்நாளில் இருந்ததை விட இலக்கியத் துறையில் போட்டி வளர்ந்துவிட்டது. விற்பனையை விழாதபடி பார்த்துக் கொள்ள தமிழ் வளர்ச்சிக்குப் பாடு படும் விஷயங்கள் நிறைந்த பத்திரிகைகளும், வேஷம் போட்டாகவேண்டிய நிலையில் இருக்கின்றன. மேலட்டையை எப்படிக் கவர்ச்சியாக அமைப்பது என்பதே நிர்வாகிகளின் பெருத்த கவலையாகி விடுகிறது. ரோஜாவிற்கு அழகையும்மணத்தையும் ஊட்டவேண்டுமா? எனக்கு ரொம்ப ரொம்ப ஆடம்பரமான கட்டிட அமைப்பு நிறைந்த புஸ்தகங்கள் பத்திரிகைகளைக் கண்டால், அவை மீது சந்தேகம்.

பூக்கடைக்காரன் விளம்பரம் செய்யவேண்டுமா? வேண்டியதில்லை. காகிதப் பூக்களை வைத்திருப்பவன் அவசியம் அதற்கு வர்ணமும், விளம்பரமும் செய்தாகவேண்டும். நல்ல புஸ்தகங்களுக்கு ஜாக்கெட், ஆடம்பரமில்லாமல் இருப்பதே எனக்குப் பிடிக்கும். புஸ்தக பிரசுரகர்த்தர்கள், எழுத்தாளரின் சரக்கைவிட, அச்சகத்தின் திறமையை வைத்தே வியாபாரத்தை எடைபோடுகிறார்கள். நானும் நண்பர்களின் அறிவை அவர்களுடைய புஸ்தகங்களை வைத்தே மதிப்பிடுவது வழக்கம்.

ஆனால் என் நண்பர் ஒருவர் புஸ்தகங்களைத் தமதறையில் தெரியும்படியாக வைக்கமாட்டார். புஸ்தகங்கள் எல்லாம், வீட்டுக்குள்ளே அதிக நடமாட்டம் இல்லாத அறையில் வைத்திருப்பார். காரணம், வருகிறவர்கள் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்று பயம். புஸ்தக விஷயத்தில் நண்பர்களை அவர் சந்தேகித்ததில் தவறில்லை. என்னிடமுள்ள புஸ்தகங்கள் பலரிடமிருந்து படிக்க வாங்கியவை அதிகமா, அல்லது என் புஸ்தகத்தைப் பலர் வாங்கிப்போனது அதிகமா, என்றால், இரண்டும் சரிக்குச் சரி. இந்தமாதிரி மனிதயோக்யதைக்கு எமனாக இருப்பவை புஸ்தகங்கள். ஆனால் புஸ்தகம் தவிர எந்தப் பொருளை வாங்கினாலும் நான் திரும்பக் கொடுக்க அஞ்சுவதில்லை. என்னிடம் கடன் வாங்கிய தொகைக்கு ஒரு செக்கும், என் கதைக்கு ஒரு பத்திரிகை அனுப்பிய சன்மானச்செக்கும் இப்படிப் பல செக்குகள் மாற்ற முடியாமல் திரும்பி வந்திருக்கின்றன.

நண்பர்கள் என்னை ஏமாற்றுவதற்கு இப்படி அனுப்பவில்லை. என் தொந்தரவுக்கு நிம்மதி தேட தற்கால சாந்தியாக ஊசி மருந்து போட்டுக்கொள்வதுபோல இந்த மாறாத செககுகளை அனுப்பியுள்ளார்கள். பணத்தை ரொக்கம் கொடுத்தால் அவசரம் அவசரமாக நான் வீட்டிலில்லாதபோது எனக்குக் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்துப்போகிறவர்களும் உண்டு

தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப்பார்த்த கதையாக அந்த நோட்டுக்களைப் பாங்கியிலே கொண்டு போய்த் தான் நீட்டவேண்டும். அங்கே வாங்க

மாட்டார்கள். உங்கள் தாத்தா கொண்டுவர வேண்டிய நோட்டய்யா, இதுதான் இந்திய அரசாங்கம் முதல் முதல் வெளியிட்டதிலும் முதல் நோட்டு என்பார்கள். இந்தமாதிரி கடனைக் கொடுக்கிறவர்கள், எனக்கு எத்தனையோ தொல்லைகளைக்கொடுக்கிறார்கள். முடிவில் எல்லாவற்றையும் ஈசனுக்கே அர்ப்பணம் செய்து விடுகிறது உண்டியலில்! என்னால் முடியாத காரியத்தைக் கடவுளிடம் ஒப்படைத்து வருகிறேனே தவிர, மற்றபடி என் நோக்கம் தவறானது அன்று. என்னுடைய தர்மகர்த்தா நண்பர், ஒருவர், தமது வசமுள்ள ஆயிரம் பதினாயிரம் ரூபாய் பெரிய நோட்டுக்களையெல்லாம், உண்டியல் கணக்கில் போட்டு, அந்த உண்டியல் சில்லரைகளைச்—சரியான கணக்குப்படி எடுத்துக்கொண்டார். இது சரியா, தப்பா என்று தீர்மானிக்க வேண்டியதைவிட, நண்பர் கடவுளை ஏமாற்றவில்லை என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

கடன் கொடுத்த பணமும், இரவல் போன புஸ்தகமும் வீட்டை விட்டு ஓடிப்போன மனைவியும் திரும்ப எதிர்பார்க்கக்கூடாத பொருள்கள். நாட்டுக்கு நாடு கடனை ஏமாற்றுவது அரசியல் சூழ்ச்சி. வியாபார தந்திரம், அதிகார வெறி. மனுஷனுக்கு மனுஷன் கடனை ஏமாற்றுவது சூழ்ச்சியோ, தந்திரமோ, வெறியோ அல்ல. மனிதத் தன்மையைக் காப்பாற்ற இவர்கள் விரும்பவில்லை. சுய நலமோ ஏழ்மையோ காரணமாக இருக்கலாம். ஆனால் வேறு சிலர் அவமானம் செய்ய வேண்டும், நாலுபேர் முன்னிலையில் 'கடங்காரா' என்று கூப்பிட மனுத்தொடுத்து தாவா கிளப்புவார்கள். அநேக கிராமங்களில் உள்ள சொத்தின் அனுபவம் கடன் வாங்கிய கிராமத்தானுக்கும், சொத்தின் உரிமை கடன் கொடுத்த நகரத்தானுக்கும் இருக்கும். 'நிலத்துக் கிட்டே வந்தால் கொத்திப்போடுவேன்' என்பான் கடனாளியாகப் போனவன். டிக்ரி வாங்கியவர் ரிக்கார்டுகளை பாச்சையரிக்க விட்டதோடு சரி.

இந்தியாவில் சி. ஆர். தாஸ் கடனைக் கொடுத்தது பெருமைப் படத்தக்க சம்பவம். இதே போன்று நெப்போலியன், சர்வாதிகாரியாகப் பதவிக்கு வந்ததும் சிறு பிராயத்தில் தான் கடன் பட்டிருந்த ஒரு பழ வியாபாரிக்கு பாக்கியைக் கொண்டு போய்க் கொடுத்தானாம்—ஆமாம் வட்டியைச் சரியாகக் கணக்கிட்டுத்தான். ஆனால், இந்த நாளிலும் நெப்போலியன்போன்ற வீரர்கள் கடனைக் கொடுப்பதில் இருக்கிறார்கள். வட இந்தியாவில் தாம் பத்து வருஷத்திற்குமுன் டிராம் வண்டியில் டிக்கெட்டு இன்றிப் போனதாகவும், தமது மனச்சாட்சி செய்ததொந்தரவு காரணமாக இரண்டணாவுக்கு வட்டி போட்டு கம்பெனிக்கு ஒரு ரூபாய் இரண்டணா கொடுத்ததாகசெய்தி வந்தது. இதைவிட ரஸமாக இங்கிலாந்தில் தவறான கணக்குக் காட்டி வருமான வரி கட்டியதில் மேலும் பவுன் 100 அரசாங்கத்திற்குச் சேர வேண்டுமென்றும், ஆனால் தற்சமயம் 5 பவுனே அனுப்பியிருப்பதாகவும், மறுபடியும் மனச் சாட்சி தொல்லை தரும் போதெல்லாம் 5 பவுனாக அனுப்பத் தீர்மானித்திருப்பதாகவும், அநாமதேயமாக ஒரு கடிதம் எழுதினாராம். இவர் ஒரு இன்சூரன்ஸ் ஏஜண்டாக இருக்கலாமோ என நான் சந்தேகிக்கிறேன். மனசாட்சி தொல்லை தரும்போது மட்டும் தவணை முறையில் கட்டக்கூடிய பேர்வழி இன்சூரன்ஸ் துறையில் பயிற்சி பெற்றவராகத்தான் இருக்க வேண்டும்.

ஆனால் என்னிடம் தத்தம் மனச்சாட்சித் தொல்லை சகிக்காமல் தமது கடன்களைத் திருப்பிக் கொடுக்க சிலர் நினைத்தால்? ஆஹா நான் நாளையே கோடீச்வரன் ஆகிவிடலாம். என் பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தாம் வாங்கிய பணத்தில் ஒரு பகுதியைத் தவணையாகவோ மொத்தமாகவோ கட்ட ஆரம்பிப்பார்கள். பால்காரர்கள் இத்தனை வருஷங்களாகத் தண்ணீர் சேர்த்து விட்ட கணக்கைக் கூட்டி நூறு நூறு ரூபாய் நோட்டுகளாக பழசாக இருந்தாலும் பரவாயில்லை! வைப்பார்கள். அப்புறம் மளிகைக் கடைக்காரர் தாம் கலப்பு ரகங்களில் நெய், எண்ணெய் கொடுத்ததற்கு வீதாசாரத்தை கணக்கிட்டுப் பணம் எண்ண வேண்டும். டாக்டர்கள் நியாயமான மருந்துச் செலவையும், தமது கூலியையும் எடுத்துக்கொண்டு தாம் வாங்கிய அநியாய பீசுகளை எண்ணி வைத்தால் அதைக்கொண்டு நான் ஒரு பாங்கியே நடத்தலாம். சினிமா, நாடகம் முதலான கம்பெனி நிர்வாகிகள் தங்கள்கலைத்திறை க்கு மட்டும் காசைப் பகிர்ந்தெடுத்து கட்டணத்தில் மிச்சத்தை என்னிடம் கொடுக்க வந்தால்......எவ்வளவு பணம் வரும்?

இந்தக் கடன் வகை, யோக்யதையும் மனச்சாட்சியையும் பொறுத்து வர வேண்டிய கடன்கள். அவ்வளவு மனிதத் தன்மை இருந்துவிட்டால் உலகத்தில் சுவாரஸ்யம் ஏது? பணத்திற்குத்தான் மதிப்பு ஏது? உலக க்ஷேமத்தின் உத்சாகத்திற்காக இக்கடன்களை நான் எதிர் பார்க்கவில்லை என என் கடன்காரர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

யாராவது என்னிடம் வாங்கிப் போன ரொக்கச் சில்லரை பவுண்டன்பேனா, புஸ்தகம், குடை இவை போன்ற சாமான்களை மட்டும் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிச் செய்கிறவர்களை பம்பாய் சிவஸ்வாமி முதலியாருக்கு அடுத்தபடியாகக் கைதொழலாம். என் சேவைக்கு ஆசைப்பட்டு, என்னிடம் சில்லரையோ பவுண்டனோ, புஸ்தகமோ வாங்காத பேர்வழிகள் தயவு செய்து அனுப்ப வேண்டாமென்று எச்சரிக்கிறேன். அப்படியே அனுப்பினால் உங்களைக் கொடையாளி என்ற தலைப்பில் அழைக்க முடியுமே தவிர, கடன்காரர்கள் என்றழைக்க முடியாது என்பதை என் மனசாட்சி சொல்லுகிறது.

அப்புறம் உங்கள் இஷ்டம்?

# பிச்சுவின் பிசாசு

~ நியாயவாதி ~

சபா வாசகசாலையில் நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அச்சமயம் அன்று வந்த பத்திரிகையில் பிரசுரமாயிருந்த ஒரு பயங்கரமான விபத்தைப்பற்றி பிரஸ்தாபம் எழுந்தது. என் பக்கத்தில் இருந்தவர் ''பயம் என்றால் என்ன? எதனால் ஒருவனுக்கு அந்த உணர்ச்சி ஏற்படுகிறது?'' என்ற கேள்வியைப் போட்டார்.

நான், "மனோதத்துவ சாஸ்திரிகளல்லவா இதற்கு பதில் கூற வல்லவர்?'' என்றேன்.

என்னெதிரில் உட்கார்ந்திருந்தவர், "ஏன் நமது சுய அறிவைக் கொண்டு இதை ஆராய முடியாதா என்ன? நான் கூறுகிறேன் கேளுங்கள். பயம் என்பது ஒரு பயங்கரமான வஸ்துவினாலோ, தோற்றத்தினாலோ உண்டாகும் உணர்ச்சி. அதனால் அதைக் காண்பவன் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதும் அதற்குக் காரணமாகும்'' என்றார்.

நான், "பாம்பு என்றால் படையும் நடுங்குகிறது. கூண்டில் அடைபட்டிருக்கும் சிங்கம், புலி முதலிய கொடிய காட்டு மிருகங்களைக் காணும்பொழுது நம்மையறியாமலே நமக்கு பயம் ஏற்படுகிறது. ஏன்? அவற்றிடம் அகப்பட்டுக்கொண்டவனுக்கு உயிர் மீட்சி ஏது?'' என்றேன்.

இந்த பிரச்னையை முதல் முதல் எழுப்பியவர், "தற்காலத்தில் பயங்கர உணர்ச்சியையே கொடுக்கும் நோக்கத்தில் தற்காலம் அநேக நாவல்களும், கதைகளும் வெளிவந்துள்ளன. ப்ராங்கின்ஸ்டீன், டிரகுலா, என்ற இரு நாவல்களும் இவ்வகையில் மிகவும் பிரஸித்தி பெற்றன''என்றார்.

அவர் அருகில் இருந்தவன், உண்மைதான். ஆனால் நமது பழைய இதிகாசங்களிலும் புராணங்களிலும் காணப்படும் பயங்கரமான கட்டங்களுக்கு இவை நிகராகமாட்டா. தனக்குப் பொய்யாஸனமிட்ட துரியோதனன் சபையில் கண்ணபிரான் காட்டிய விசுவரூபமும், அர்ஜுனனுக்கு பாரதயுத்தம் தொடங்குமுன் கீதோபதேசம் செய்தபொழுது அவர் காட்டிய விசுவரூபமும் நமது மனக்கண்ணால் காண இயலுமோ? அப்படிக் காண முடியுமானால் நாமும் துரியோதனனின் சபையோரைப்போலவும் அர்ஜுனனைப்போலவும் நடு நடுங்கிப்போய் இருப்போம்'' என்றார்.

அவர் கூறியதை ஆமோதித்த நான் "பாகவத புராணத்தில் வருணிக்கப்பட்டுள்ள நரஸிம்ம அவதாரம் எவ்வளவு பயங்கரமானது? பாலன் பிரகலாதனை மிரட்டிக்கொண்டே பெருமிதத்துடன் தூணை காலால் உதைத்த ஹிரண்ய கசிபு, மறுவிநாடியே அது பிளந்து அதிலிருந்து தன்னைக் கொல்லுவதற்காக காத்திருந்த மிருத்யு அவ்வளவு பயங்கரமான ரூபத்துடன் தோற்றமளிக்கும் என்று எதிர்பார்த்தானா? பயங்கரத்திலும் பயங்கரம் ஹிரண்யவதம்!

'உரம்பற்றி இரணியனை உகிர் நுனியால் ஒள்ளியமார்பு உறைக்க ஊன்றி சிரம் பற்றி முடியிடிய கண்பிதுங்க வாயறத் தெழித்தான்''

என்று நரஸிங்கத்தை வருணிக்கும் ஆழ்வார் பாசுரம் அவரிடம் அகப்பட்டுக்கொண்ட அரக்கனது நிலைமையும் அற்புதமாய் வருணிக்கிறது. இதைவிட நடுக்கத்தைக் கொடுக்கும் பயங்கரமான காட்சி எங்கும் காணமுடியாது'' என்றேன்.

"அதனால் தான் பகவானது சஹஸ்ரநாமங்களில் (பயக்ருத்)-பயத்தை உண்டாக்குபவர்)என்ற நாமமும் ஏற்பட்டது போலும்' என்றார் என் நண்பர்.

எங்களில் சம்பாஷணையில் கலந்துகொள்ளாமல் மௌனமாய் உட்கார்ந்திருந்த பாலுவைப் பார்த்து ஒருவர் "ஏன் ஸார்! நீங்களும் ஏதேனும் கூறலாமே?'' என்றார்.

பாலு புன்னகை புரிந்தார். "நீங்கள் இதுவரையில் சொல்லாத ஒருவிஷயத்தைப்பற்றி நான் சொல்லப் போகிறேன். பேய், பிசாசு என்று சொன்னாலே பயமாயிருக்கிறது! அவற்றைப் பார்த்தாலோ அவற்றிடம் அகப்பட்டுக் கொண்டாலோ அவனது கதி என்ன?'' என்று வினவினார்.

" அதோகதிதான் '' என்றேன் நான்.

பாலு, "எனக்கு ஏற்பட்ட அனுபவம் பயங்கரமானது. அதை நான் கூறப் போகிறேன். கேளுங்கள்'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார். அவர் கூறியது பின்வருமாறு:—

"முப்பது வருடங்களுக்கு முன்னர். நடந்த சம்பவம் அது. ஆனால் அதை இப்பொழுது நினைத்தாலும் எனக்கு என்னையறியாமலே நடுக்கம் உண்டாகிறது. என்னுள்ளம் சில்லிடுகிறது. என்னுடல் ஸ்தம்பிதமாகிறது என்றால் பார்த்து கொள்ளுங்களேன்!

"அப்பொழுது எனக்கு வயது பதினான்கு எனக்கு உபநயனம் ஆகி இரண்டு வருடங்கள் ஆயின.

அந்த இரண்டு வருடங்களாய் நான் சம்புநாதபுரம் பாடசாலையில் வேதாத்தயயனம் செய்துகொண்டிருந்தேன்.

பரம்பரையாய் வேதம் ஓதுவதும் வைதிக கிரியைகள் செய்வதும் எங்கள் குடும்பத்துக்கு ஏற்பட்ட தொழில். என் பிதாவுக்கு நான் ஏக புத்திரன். அவர் கிரமப்படி அத்தயயனம் செய்தவர். சிவபூஜாதுரந்தரர். ஆசாரசீலர். எங்களுக்கு பரம்பரையாயுள்ள மானிய நிலம், தோப்பு, வீடு எல்லாம் இருந்தன. சோற்றுக்கும் துணிக்கும் எங்களுக்கு குறையில்லை.

"கிராம பள்ளிக்கூடத்தில் நான் ஆரம்பத்தில் ஏதோ கொஞ்சம் தமிழும் ஆங்கிலமும் படித்தேன். ஆனால் எனக்கு உபநயனம் ஆனபின் என் தகப்பனார் அந்த படிப்பை நிறுத்திவிட்டு என்னை வேதமோதுவதற்காக சம்புநாத அவருக்கு ஆங்கிலப் படிப்பு என்றாலே வெறுப்பு. அப்படிப்பு படித்துவிட்டு நாத்தழும்பு எழ நாஸ்திகம் பேசிக்கொண்டு ஆசார அனுஷ்டானங்களை கைவிட்டுவிட்டு திரிந்த இளைஞர்களைப் போல் நானும் ஆகிவிடுவேன் என்று அவர் அஞ்சினார். அதனால்தான் அவர் என்னை வேதமோதுவதற்கு ஏற்பாடு செய்தார். இது என் தாய்க்கு பிடிக்கவில்லை. ஆங்கில படிப்பு படித்துவிட்டு நல்ல உத்தியோகத்தில் நான் அமரவேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். பட்டணத்தில் வக்கீலாய் இருந்த என் மாமாவுக்கும் புரம் பாடசாலைக்கு அனுப்பினார். அதுதான் ஆசை. என்னைப் பட்டணத்திலே தன்னுடன்வைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தக்கு அனுப்பி, யுக்த வயதில் எனக்கு தன் பெண்ணை விவாகம் செய்து கொடுக்க அவர் எண்ணினார். ஆனால் மகா பிடிவாதக்காரரான என் பிதா என்னை வைதிகத்துறையில் பிரவர்த்திக்க நிச்சயித்துவிட்டார்.

"சம்புநாதபுரம் ஒரு அழகான ஊர். அக்கிரகாரத்தின்நடுவேசம்புநாதர் கோவில். அதன் நாற்புறமும் வீதிகள். சுமார் 500 வீடுகள் வடக்கு வீதியில் உள்ளன. நான் அத்தயயனம் செய்த பாடசாலையிலேயே சத்திரமும் இருந்தது. பாடசாலைப் பையன்களுக்கெல்லாம் இலவச உணவு. அக்கிரஹாரத்துக்கு மேல்புறம் குடியானத்தெரு. ஊரைச்சுற்றிலுள்ள நாலாபுரங்களிலும் தோப்புகள் வயல்கள், துறவுகள். ஊருக்கு வடக்கே அரை மைல் தூரத்தில் காவேரி நதி. வருடத்தில் பத்து மாதம் அதில் ஜலம் ஓடிக்கொண்டே இருக்கும்.



"ஊருக்கு வெளியே கிழக்கில் உள்ளது தெப்பக்குளம். அதன் கரையில் ஒரு மண்டபம். அம்மண்டபத்துக்கு ஒரு புறத்தில் ஒரு புளியமரம். அப்புளியமரத்தில்தான் பிச்சு ஐயனின் பிசாசு வாசம் செய்தது என்பது அந்த ஊராரின் நம்பிக்கை. அப்பிசாசைப் பற்றி பற்பல கதைகள் வழங்கி வந்தன.

"சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் அந்த ஊரில் பிச்சு ஐயன் என்ற ஒரு பிராம்மணன் இருந்தான். அவன் வேதம் பயின்றவன். சாஸ்திரங்களில் நிபுணன். அக்காலத்தில் அப்பிரதேசத்தை ஆண்டு வந்த சுதேச மன்னனால் பலதடவைகளில் வெகுமானிக்கபட்டவன்.

"என்ன விற்பத்தி இருந்தால் என்ன? அவன் அந்த ஊரில் இருந்த ஒரு அழகிய தாஸியின் வலையில்சிக்கி முடிவில் அவளால் விஷம் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டான். துர்மரணத்துக்குள்ளான அவன், பிசாசாய்விட்டான். அந்த ஊர் தெப்பக்குளத்து மண்டபத்து புளியமரத்திலே வசித்துக்கொண்டு துஷ்டர்களையும் துராசாரசாரிகளையும் பயமுறுத்திக்கொண்டுவந்தான் என்பது அந்த ஊரிலுள்ளவர்களது நம்பிக்கை. யாரும் இருட்டினபின்னரும், உதயத்துக்கு முன்னரும் அந்த தெப்பக்குளம் பக்கம் தனியே போக மாட்டார்கள்.

நான் பாடசாலையில் இருந்த பொழுது அந்த ஊர் கர்ணத்தின் மகன் கோவிந்தனுடன் நெருங்கி பழகினேன். அவன் என்னுடன் பாடசாலையில் வேதமோதுபவன்.

பகல் நேரங்களில் நாங்கள் ஒன்று சேர்ந்திருப்போம். இரவில் அவன் படுக்கத் தன் வீட்டுக்குப் போய் விடுவான். பாடசாலையிலுள்ளவர்கள் எங்களை இரட்டைப் பிறவி என்று கூறுவார்கள்.

"ஒருநாள் சாயந்திரம் நானும், கோவிந்தனும் தெப்பக்குளத்தில் சந்தியாவந்தனம் செய்துவிட்டு மண்டபத்தில் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருந்தோம். அப்பொழுது நான், புளியமரத்தைச் சுட்டிக் காட்டி, 'அந்த மரத்தில் ஒரு பிசாசு இருக்கிறதாமே?' என்றேன்.

கோவிந்தன், "உஸ், சும்மா இரு" என்றான். என் வாக்கில் சனி இருந்தது போலும். போடா, பிசாசாவது மண்ணாங்கட்டியாவது. பிச்சு ஐயன் பிசாசு என்னை என்ன பண்ணிவிடும்?" என்றேன். அப்பொழுது "கிரீச் கிரீச்" என்று சப்தம் கேட்டது.

கோவிந்தன், "யாரோ நிற்பது போல் இருக்கிறதே?" என்றான்.

நான், "மரத்தின் இலைகள் காற்றில் அசைகின்றன. அந்த சப்தத்தைப் பார்த்துவிட்டு நீ பயந்துவிட்டாய்" என்று அவனைக் கேலி செய்தேன்.

கோவிந்தன், "இருட்டிவிட்டது. இனி நாம் இங்கே இருக்கக் கூடாது. போகலாம் வா" என்று எழுந்தான்.

நானும் எழுந்தேன். மறுநாள் அதிகாலையில் என்னை பாடசாலையில் வந்து எழுப்பும்படி அவனிடம் கூறினேன். இருவரும் காவேரிக்குப்போய் ஸ்னானம் செய்து வர உத்தேசித்திருந்தோம்.

* * *

"பாலு பாலு" என்று யாரோ கூப்பிட்ட சப்தம் கேட்டுவிட்டு நான் எழுந்தேன். பாடசாலையின் வெளிக் கதவை தட்டினவன் கோவிந்தன்தான். "என்னடா அதிகாலையிலே எழுப்பச் சொல்லிவிட்டு கும்பகர்ணன் மாதிரி தூங்குகிறாய்?" என்றான் அவன்.

ரேழியில் படுத்திருந்த நான் எழுந்து கதவைத் திறந்து காவேரிக்குப் புறப்பட ஆயத்தமானேன். ரேழியில் என் அருகில் தூங்கின ஒரு சகபாடியை



நண்பர்—என்னங்க. தினமும் வுளுந்து வுளுந்து ஹிந்தி படிக்கிறீங்க?

பெரியவர்:—நம்ப பையன் சரிவர ஹிந்தி படிச்சிகிட்டுவாரானன்னு பாக்கறத்துக்கு எனக்கு ஹிந்தி தெரியாட்டி அந்த போக்கிரிப்பய என்னை ஏய்ச்சுபுடுவான்......அதுக்குதானுங்க........"

எழுப்பி கதவை மூடிக்கொள்ளும்படி கூறிவிட்டு கோவிந்தனுடன் புறப்பட்டேன்.

கோவிந்தன் விரைந்து சென்றான் வஸ்திரத்தில் தன் உடம்பையும் தலையையும் போர்த்துக்கொண்ட அவன் என்னுடன் உரையாடவில்லை. நானும் மௌனமாய் அவன் பின்னே சென்றேன்.

ஊருக்கு வெளியேயுள்ள வயல்களின் வரப்புகள்மேல் சென்றுகொண்டிருந்த அவன் பின் என்னால் துரிதமாய் நடக்க முடியவில்லை. "என்னடா இவ்வளவு வேகமாய்ப் போகிறாய்? கொஞ்சம் மெதுவாய்ப் போகலாமே?" என்றேன். அவன் என்னைத் திரும்பிப் பாராமல் "முட்டாள்! பேசாமல் வா!" என்றான்.

"இவ்வளவு வேகமாய் நடக்கிறானே இவன்! இவனது பாதங்களில் முள்ளுகள் தைக்க மாட்டாவா? அல்லது கற்கள்தான் குத்தமாட்டாவா?" என்று எண்ணிய நான் அவன் பாதங்களை நோக்கினேன். மறுவினாடி என் ஹிருதயம் சில்லிட்டு விட்டது.

"அந்த ஆஸாமி இடுப்பு வஸ்திரத்தின் கீழ் பாகம் இல்லை. ஆம். அவன் தரையில் ஊன்றி நடக்கவில்லை. காற்றின் சலனத்தைப் போல் இருந்தது அவன் நடை!

"அப்பொழுது எனக்குப் பயங்கரமான உண்மை புலப்பட்டுவிட்டது. என் முன் சென்றது கோவிந்தனல்ல. பிச்சு ஐயனின் பிசாசு! முந்திய நாள் சாயந்திரம் எங்களது சம்பாஷணைக் கேட்டுவிட்டு என்னை தண்டிக்கவே அது அப்படி வந்து என்னை ஏமாற்றி அழைத்து வந்துவிட்டது!

அன்று பௌர்ணமி, நிலா பிரகாசித்தது. ஆகாசத்தைப் பார்த்தேன். ஐயோ! அப்பொழுது சந்திரன் உச்சஸ்தானத்தில் இருந்தான். அப்படியாயின் அப்பொழுது நடு நிசிதான். அந்த சமயத்தில் பிசாசிடம் சிக்கிக்கொண்டு விட்டேன்!

"அப்பொழுது வயல்களைகடந்து மாந்தோப்பில் போய்க்கொண்டிருந்தோம். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பால்யத்தின் பூர்ணமான உத்வேகமும் என்னிடம் இருந்தது. அப்படியிராவிடில் நான் கூச்சலிட்டிருப்பேன். பிச்சு ஐயன் பிசாசால் அடிபட்டு வயலில் பிணமாய் விழுந்திருப்பேன்!

"எப்படியாவது அந்த இடத்தை விட்டு தப்பி வந்துவிட வேண்டும் என்று நான் தீர்மானித்தேன். சரேரென்று எனக்கு ஒரு யுக்தி தோன்றியது. முன்னால் சென்றவனை விளித்து "கோவிந்தா! மாம்பழம் சாப்பிட வேண்டும் என்று எனக்கு ஆசையாயிருக்கிறது. மரத்தில் ஏறி மாம்பழங்களை பறித்துகீழே போடுவாயா?" என்றேன்.

"அதற்கென்ன! நீ இங்கேயே இரு. நான் மரத்தில் ஏறி பழங்களை பறித்துப் போடுகிறேன்" என்று கூறிவிட்டு பிசாசு மரத்தில் ஓடியது.

அது ஏறிய சில வினாடிகளுக்குப்பின் நான் என் மேல் வஸ்திரத்தை எடுத்து ஒரு குச்சியில் நட்டுவைத்து மூடினேன். மரத்தின் மேல் இருந்து பார்ப்பவனுக்கு ஒருமனிதன்போல் தோன்றும்படி செய்துவிட்டு, சந்தடியின்றி நான் திரும்பி ஓட்டம் பிடித்தேன்.

"நான் எவ்வளவு நேரம் ஓடியிருப்பேனோ தெரியாது! ஆனால் உயிரையல்லவா என் கையைப் பிடித்துக்கொண்டு ஓடினேன், வெகு சீக்கிரத்தில் பாடசாலையை அடைந்தேன். கதவை தட்டினேன், கதவு திறக்கப்பட்டதும்

நான் உள்ளே சென்று கதவை தாளிட்டு, ஐயா பிச்சுவையன் பிசாசு வந்துவிடும்! கதவை திறக்காதீர்கள்!" என்று உளறிக் கொண்டே கீழே விழுந்தேன். எனக்கு ஸ்மரணை தப்பிவிட்டது.

"எனக்கு கடுமையான ஜுரம், ஜன்னி. என் தகப்பனார் என்னை ஊருக்கு அழைத்துப்போனார் அங்கே எனக்கு குணம் ஏற்படவில்லை. என் மாமா வந்து என்னை பட்டணத்துக்கு கூப்பிட்டுக்கொண்டு போனார். எவ்வளவோ வைத்தியம் செய்த பிறகு தான் எனக்கு குணம் ஏற்பட்டது. எனக்கு உடல் நலம் பெற ஆறுமாதம் பிடித்தது.

"மறு வருடம் என் தகப்பனார் இறந்துவிட்டார், நானும் என் தாயும் கிராம வாஸத்துக்கு ஒரு முழுக்குப்போட்டுவிட்டு பட்டணத்திலேயே நிரந்தரமாய் வசிக்கலானோம். என் மாமா என்னை ஆங்கில பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார். என் புது வாழ்க்கை ஆரம்பமாயிற்று.

"பிச்சுவையன் பிசாசு என் வாழ்க்கையை அடியோடி மாற்றி விட்டது: என்பதில் என்ன சந்தேகம்? அதை நான் சந்தித்திராவிடில் என் வேதாத்தியனம் தடைப்பட்டிராது. நான் கிராமத்திலேயே ஒரு வைதிக சாஸ்திரியாய் வேதமோதிக்கொண்டு அக்கினீ ஹோத்ரம் வைசுவதேயம் இவற்றை விடாமல் செய்து கொண்டிருந்திருப்பேன். ஆனால் பாழும் பிச்சு வையன் அதையெல்லாம் கெடுத்துவிட்டான்.

"கதை எப்படி?"

என்று கேள்வியுடன் பாலு முடித்தார்.

என்பக்கத்தில் இருந்த ஒருவர், "ஏன் ஸார், கடைசியில் நீங்கள் உங்கள் மாமா பெண்ணை மணந்து கொண்டீரோ?" என்று கேட்டார்.

பாலு எழுந்தார் புன்சிரிப்புடன். "ஆகா மேளதாளத்துடன் மணந்து கொண்டேன். அதனால்தான் இப்பொழுது தொல்லைபடுகிறேன். பிச்சுவையன் பிசாசு எனக்கு செய்த அபகாரம் இதுதான். சரி நான் போய் வருகிறேன்" என்று வெளியே சென்றார்.

"கதை நன்றாய் இருக்கிறது. ஆனால் அது உண்மையா? அதை நம்புகிறீர்களா" என்று கேட்டேன்.

"எப்படி நம்புவது?" என்றார் நண்பர்.

"ஏன்?" என்றேன்.

என்னண்பர், "உமக்குத் தெரியாதா? பாலு, கதைகள் எழுதியவர். என்பதை 'பூதம்' என்ற புனைப்பெயருடன் அவர் எத்தனையோ பிசாசு கதைகள் எழுதியிருக்கிறார். இதுவும் அவரது கற்பனையாய் இருக்கலாம்" என்றார்.

—✿—



ஹாலண்டு. இளவரசி ஜூலியானாவும் அவருடைய கணவர் பர்ன் ஹார்டும், நெதர்லண்ட் ராணி வில்ஹெல்மினா முடி துறந்தவுடன் 39-வயதுள்ள ஜூலியானா இரண்டாவது பட்டத்தரசியாக வருகிறார்



# மாதர் மகா சபை

குங்குமம்

'குஞ்சாமணி வருகிறாள்' என்றாள் ருக்கு.

'வாடியம்மா வா, வழி தெரிந்ததோ?' என்று அங்கு வந்த குஞ்சாமணியை வரவேற்றாள் ருக்குவின் மாமியார்.

'என்ன மாமி அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?' என்று சொல்லிக்கொண்டே அங்கு வந்து உடகார்ந்தாள் குஞ்சாமணி.

'கல்யாண தடபுடல். அவளுக்கு வர ஒழியுமா?' என்றாள் சாந்தா.

'நான்கூட அப்படித்தான் நினைத்தேன். கல்யாணம்தான் நின்றுவிட்டதாமே!' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதற்குள்ளாக யார் மாமி சொல்லிவிட்டார்கள்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் குஞ்சாமணி.

'அந்தக் கம்பியில்லாத் தந்திகளையெல்லாம் யார் சொல்வார்கள்?'

'சேஷிப் பாட்டியா?'

'அவள்தான் சொன்னாள். வாஸ்தவந்தானா?'

'வாஸ்தவந்தான். அது கிடக்கட்டும். இது இன்னும் யாருக்குமே தெரியாதென்று நாங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அதற்குள் அவளுக்குத் தெரிந்து, அதை இங்கே வந்து சொல்லிவிட்டும் போயிருக்கிறாளே, அதுவல்லவோ வேடிக்கை. அவள் சி. ஐ .டி. ஏதாவது வைத்து வேலை செய்கிறாளோ என்னவோ தெரியவில்லை. இல்லாவிட்டால் மூலை முடுக்கில் எங்கே எது நடந்தாலும் சேஷிப் பாட்டிக்குத் தெரிந்த பிறகுதானே மீதி பேருக்குத் தெரிகிறது!' என்றாள் குஞ்சாமணி.

'ஆமாம், பெண் பிடித்திருக்கிறது என்று சொன்னார்கள். சீர் வரிசைகளெல்லாம் அவர்கள் சொன்னபடி ஒப்புக்கொண்டாகிவிட்டது. பின் ஏன் நின்றுவிட்டது?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏன்? கல்யாணம் நின்றுவிட்டதைச் சொன்னவள், கூடவே காரணத்தையும் சொல்லவில்லையா?' என்றாள் குஞ்சாமணி.

'அதையும் சொல்லத்தான் வாயெடுத்தாள். அதற்குள் அவளுடைய பேரன் வந்து அவசரமாய் அழைத்துக்கொண்டு போய்விட்டது. ஏன் என்னவாம் அவர்களுக்குத் திடீரென்று இந்த மாதிரி வக்ர புத்தி?'

'பேச்சு வார்த்தையெல்லாம் முடிந்துவிட்டது. முகூர்த்தத்துக்குத் தேதியும் குறிப்பிட்டாய் விட்டது. அவர்களும் சந்தோஷமாய் எழுந்துபோகிற சமயத்தில், பையனுக்கு மாமாவாம் ஒருவர்—திடீரென்று ஒரு 'வெடிகுண்டை' வீசி எறிந்தார்.'

'சகுனி மாமாவா என்ன? என்ன சொல்லிற்று?'

'என்னுடைய ஒட்டியாணத்தைப்பார்க்கவேண்டுமென்றது'

'பார்க்கட்டுமே!'

'நாங்கள் மாத்திரம் வேண்டாமென்று சொன்னோமா, என்ன? தாராளமாய்ப் பார்க்கட்டுமென்று கழட்டிக் கொடுத்தோம். அதை அப்படியும் இப்படியும் இரண்டு கையிலும் 'நிறுத்திப் பார்த்து விட்டு' 'இருபது சவரனா?' என்று கேட்டது. 'ஆமாம்' என்றார் அப்பா. 'பார்ப்பதற்குக் கணிசமாகத்தான் இருக்கிறது. ஆனால், இருபது சவரனுக்குள்ள பளுவையே காணோமே. லேசாக இருக்கிறதே' என்றது. உடனே ஒவ்வொருவராக வாங்கிப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். சிலர் இருபது சவரன் இருக்கும் என்றார்கள். சிலர் சந்தேகமாகத்தான் இருக்கிறது என்றனர். "பார்க்கும்பொதே



''...தாலிச்சரட்டைக்கூட வெட்டுவீர்போல் இருக்கிறதே...''

தெரியவில்லையா ஸ்வாமி! இது இருக்கிற அளவுக்கு முப்பது அல்லது நாற்பது சவரன் பளுவுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமே. சப்தமே ஏதோ ஒரு மாதிரி 'இரைச்சலாய்க்' கேட்கிறதே. தட்டானைக் கூப்பிட்டுக்கொண்டு வந்து வெட்டிதான் பார்க்க வேண்டும்'' என்றது. அப்பாவுக்குக் கோபம் வந்துவிட்டது. 'அப்படியானால் வளையல்கள், செயின்கள், தாலிச்சரடு எல்லாவற்றையும் வெட்டிப் பார்த்துதான் விடுவீர்போலிருக்கிறது' என்றார். 'என்ன செய்கிறது ஸ்வாமி! சந்தேகம் வந்துவிட்டால் அதை நிவர்த்தி செய்துதானே ஆக வேண்டும்? உங்களைச் சொல்லவில்லை. பொதுவாகக் காலம் கெட்டுக் கிடக்கிறது பாருங்கள்' என்றது அந்தச் சமத்து. 'ரொம்ப நன்றாக இருக்கிறது வார்த்தை. கலியாணம் நிச்சயம் செய்கிற சமயத்தில் அச்சான்யம் மாதிரி நகையை வெட்டிப் பார்ப்பதாம், இந்தக் காட்டான்களிடம் சம்பந்தம் செய்துவிட்டு மீதி நாளைக்கு வாழ்ந்தமாதிரிதான் 'உரைகல் வெட்டிரும்பு சகிதம் நகை பண்ணுபவனையும் கூடவே அழைத்துக் கொண்டுபோய்கல்யாணம் நிச்சயம் செய்கிற இடம் இதுவல்ல. அதற்கெல்லாம் வேறு இடம் இருக்கிறது.நல்லவேளை; உங்கள் ஸ்வரூபத்தை முன்னாடி காட்டினீர்களே. அதுவே ரொம்ப சந்தோஷம். எங்கள் பெண்ணுக்கு வேறு எங்காவது வரன் பார்த்துக் கொள்கிறோம். தயவுசெய்து போய்வாருங்கள், என்று சொல்லிவிட்டு, 'எழுந்திரடி! இவர்கள் முகத்தில் விழித்தால் கூடத்தோஷம் உண்டு' என்று சொல்லிக்கொண்டே விரு விருவென்று உள்ளே போய்விட்டார் அப்பா 'நீங்களே சொல்லுங்களேன் மாமி, எப்படியிருக்கிறது நியாயம்?' என்றாள் குஞ்சாமணி.

'உங்கள் அப்பா கிரமமானபடி நகை போட்டிருக்கிறார். அவருக்குக் கோபம் வரவேண்டியதுதான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் பக்கத்துத் தெருவில் நடந்த சம்பவம் தெரிந்திருந்தால் அந்த மாமா சொன்னதிலும் தவறு இல்லை என்ற முடிவுக்குத்தான் வருவீர்கள் என்றாள் சரோஜா.

'அதென்னடி அது, பக்கத்துத்தெரு சம்பவம்!' என்றாள் ருக்குவின் மாமியார்.

'பெண்டாட்டியின் நகையை அடகு வைக்கப்போய் ஆறு மாசம் சிறைவாஸம் கிடைத்தது அகமுடையானுக்கு' என்றாள் சரோஜா.

'சுற்றி வளைக்காமல் ஒரு விஷயத்தையாவது நேராக சொல்லும் ஸமாசாரம்தான் உன்னிடம் கிடையாதே! ஏன்? எப்படி? எங்கே? எப்பொழுது? இதையெல்லாம் கேட்கும்படியாக வைத்துக்கொள்ளாமல் சரியானபடி பதில் சொல்லிவிட்டால் தலை வெடித்தா போய்விடும்?' என்றாள் விமலா.

'அப்படியானால் அந்த வார்த்தைகளெல்லாம் எதற்காக இருக்கிறதாம்?' என்றாள் சரோஜா.

'அது கிடக்கட்டும், மேலே சொல்லடி' என்றாள் ருக்குவின் மாமியார்.

'பக்கத்துத் தெருவிலே சௌந்தரராஜ அய்யங்கார் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஆறு பெண்கள். பாவம்! ஏழைப்பட்ட குடும்பந்தான். எப்படியோ கஷ்டப்பட்டு முதல் இரண்டு பெண்களுக்குக்கல்யாணம் செய்துவிட்டார். பெண்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் வரனுக்கு அலையும் அலைச்சல்தான் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆண் என்ற யோக்யதாம்சம் இருந்துவிட்டால் போதும். ஆகாயத்தைப் பார்க்க ஆரம்பித்துவிடுகிறதுகள். அதற்குமேல் குலம், கோத்திரம், படிப்பு, அழகு எல்லாம் இருந்துவிட்டால், தேவலோகத்திலிருந்து அப்ஸரஸ்கள் வந்து கனகாபிஷேகம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறதுகள். 'நாக்கில் நரம்பு இல்லாமல் என்னதான் கேட்கிறார்கள் ஸார்............ ஆபீஸில் அடெண்டராம் ஒரு பையன். பஸ்டு பாரமோ, செகண்டு பாரமோ படித்திருக்கிறானாம். சொத்து என்று சொல்லிக்கொள்ள குழி நிலம் கிடையாது. அழகோ, பகலிலேயே இருக்கிற இடத்தை விளக்கேற்றித்தான் பார்க்க வேண்டும். முகத்தில் களையையே காணோம். அது என்னடாவென்றால், 'பெண் அழகாக

இருப்பாளா? நன்றாகப்பாடுவாளா? என்னென்ன நகை செய்து போட்டிருக்கிறீர்கள்? கையில் ஆயிரம் கொடுப்பீர்களா? இரண்டாயிரம் கொடுப்பீர்களா?' என்று பேரம் பேசுகிறது. பெண்ணை வைத்துக் கொண்டிருப்பவன் ஏழையாகவும் இருந்துவிட்டால் என்னதான் செய்கிறது' என்று சௌந்தரராஜ அய்யங்கார் அப்பாவிடம் ஒருநாள் அழுமாட்டாத குறையாய்த் தன்னுடைய கஷ்டங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். பெண்களுக்கோ வயது இருபதும் இருபத்திரண்டுமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. பெற்றோர்கள் விசாரம் ஒருபுறமிருக்கட்டும். அக்கம் பக்கத்து ஜனங்களின் வம்பளப்பு காது கொண்டு கேட்க முடிகிறதில்லை. அவரும் பாவம், தனக்கும் கீழ்ப்பட்ட ஸாதாரண வரன்களாகத்தான் பார்த்தார். எதுவும் இரண்டாயிரத்துக்குக் குறைந்து வருவதாகக்காணோம். அத்துடன் இப்பொழுது சவரன் விற்கிற விலையில் ஆறு சவரனில் ஒரு செயின், எட்டு சவரனில் நான்கு வளையல்கள் என்று கண்டிஷன்களெல்லாம் பேச ஆரம்பித்ததுகளானால், அவர்தான் என்ன செய்வார் பாவம்!, என்று சரோஜா சொல்லி முடிப்பதற்குள், பூச்சு நகைகளாகவே நிரப்பிவிட்டாராக்கும்' என்றாள் பானு.

'பரவாயில்லையே. சொல்லிவிட்டாயே!' என்றாள் சரோஜா.

'வேறு வழி? அப்படியெல்லாம் 'கண்டிஷன்' பேசுகிறவர்களுக்கு இப்படித்தான் செய்ய வேண்டும்' என்றாள் பானு.

'பிள்ளை வீட்டுக்காரர்கள் ஒரு வடம் செயின் என்று சொன்னால் இரண்டு வடமாகவும், நான்கு வளையல்கள் என்றால் ஆறு வளையல்களாகவும் இன்னும் அவர்கள் சொல்லாத இரண்டு மூன்று 'ஐடங்கள்' எல்லாம் வெள்ளி பொன் முலாம் பூசி 'ஜமாய்த்துவிட்டு' எல்லாம் அசல் பொன் என்று சொல்லிவிட்டார். பிள்ளை வீட்டுக்காரர்களுக்குச் சந்தோஷம். பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு போய்விட்டார்கள். கொஞ்ச நாளைக்கு எல்லாம் சரியாகவே நடந்து வந்தது. பிள்ளை வீட்டுக்காரர்களும் அப்படி ஒன்றும் சொத்து உள்ளவர்கள் அல்ல. பிள்ளையாண்டானுக்கு ஏதோ ஒரு பாங்கியில் வேலை. பாங்கி பணத்தைக் கையாண்டுவிட்டான்' என்றாள் சரோஜா.

'பெண்டாட்டிதான் உடம்பு முழுவதும் பொன் நகையாகவே போட்டுக்கொண்டிருக்கிறாளே, எதையாவது ஒரு நகையை விற்று அடைத்துவிடலாம்' என்ற தைரியம் என்றாள் பானு.

அந்த தைரியம்தான். ஒரு செயினையும் இரண்டு வளையல்களையும் சௌக்கார் கடையில் அடகு வைத்துப் பணம் கேட்டது. 'அசல் பொன்தானா?' என்று சௌக்கார் கேட்டானாம். அசல் பொன்தான் என்று சொல்லிற்றாம். உடனே இரண்டு சாட்சிகளை வைத்து மோசடிக் குற்றத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்து விட்டானாம் சௌக்கார். மாஜிஸ்டிரேட் ஆறுமாதம் தண்டித்து விட்டாராம் என்றாள் சரோஜா.

'இருந்தாலும் அந்தப்பெண்ணுக்கு அவ்வளவு நெஞ்சுறப்பு கூடாது. அந்த சமயத்திலாவது உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும் என்றாள் ருக்கு.

'அதற்குத் தெரிந்தால் சொல்லியிருக்கும், நகையைக் கொடு என்று அதைக் கேட்பதற்கு அவமானம். ஆகவே அது ஒரு வெள்ளிக்கிழமை தினம் நகைகளைக் கழற்றி வைத்துவிட்டு எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்கையில் அதற்குத் தெரியாமல் இவன் எடுத்துக் கொண்டு போய்விட்டானாம்' என்றாள் சரோஜா.

'அதனால் நீ என்ன சொல்கிறாய். பெண் வீட்டுக்காரர்கள் ஏமாற்றியது தவறு என்று சொல்கிறாயா? அவர்கள் அப்படிப் பேராசை பிடித்து அலைந்தால், பெண்ணை வைத்துக் கொண்டிருப்பவர்களின் கதி என்னவாகிறது?' என்றாள் பானு.



"......சௌந்தரராஜய்யங்கார் தன் கஷ்டங்களை எல்லாம்......"

'இதனால் நியாயமாக நடந்து கொள்கிறவர்களிடம் சந்தேகம் ஏற்பட்டு, அனாவசியமான தொந்திரவுகள் ஏற்படுகிறதே என்கிறேன்' என்றாள் சரோஜா.



"..........மார்வாடியிடம் போனதில்..."

'அதற்கு என்ன செய்யலாம்? அப்படித்தான் வந்து சேரும். பொதுவாகச் சொல்வதானால், பிள்ளை வீட்டுக்காரர்கள் இந்த பேரத்தை இவ்வளவு கேவலமான நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடாது. அதனால் ஏற்படுகிற தொந்தரவுகள் தான் இதெல்லாம். யார் எதை வேண்டுமானாலும் சொல்லட்டும், எனக்கென்னவோ சௌந்தரராஜ அய்யங்கார் செய்தது சரி என்றுதான் ஒரு விதத்தில் தோன்றுகிறது. ஏமாற்றுவது கூடாதுதான். ஆனால் அப்படிப்பட்ட நிலைமைக்குக் கொண்டு விட்டுவிடுகிறார்களே. அதற்கென்ன செய்கிறது!' என்றாள் ருக்குவின் மாமியார்.

'என்னமோ இந்தக் கூத்தும் இன்னும் கொஞ்ச நாளைக்கு. பெண்களும் படித்துவிட்டு உத்யோகம் பார்க்க ஆரம்பித்துவிட்டதுகளானால்—அதாவது கல்யாணத்துக்கு ஒரு குறிப்பிட்ட காலம் என்ற நிர்ப்பந்தம் என்பது இல்லாமல் போய்விட்டதானால், இந்த கிராக்கிகளெல்லாம் தானாகப் போய்விடும். அதையும் சீக்கிரத்தில் நாம் பார்க்கத்தான் போகிறோம். வருகிறேன் மாமி நேரமாகிறது' என்று எழுந்தாள் குஞ்சாமணி.




சென்ற வாரம் சென்னையில் கவர்னர் ஜெனரல் ராஜாஜி முஸ்லிம் ஆர்பனேஜ் அஸ்திவாரக் கல்லை நாட்டியபோது எடுத்த படம்.

# இராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி-அரியக்குடி
ராமானுஜய்யங்கார்
ஸ்வரப்படுத்தியது

'நிதியைப் பொழியும் முகில்'என்று
நீசர்தம் வாசல் பற்றித்
துதிகற்(று) உலகில் துவள்கின்றி
லேன்இனித் தூய்நெறி சேர்
எதிகட்(கு) இறைவன் யமுனைத்
துறைவன் இணையடி யாம்
கதிபெற் றுடைய இராமா-
நுசன்என்னைக் காத்த னனே

கார்த்திகை யானும் கரிமுகத்-
தானும் கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும்
முதுகிட்டு 'மூவுலகும்
பூத்தவ னே!'யென்று போற்றிட,
வாணன் பிழை பொறுத்த
தீர்த்தனை ஏத்தும் இராமா-
நுசன்என்தன் சேம வைப்பே 22.

[நிதி-செல்வம். முகில்-மேகம். துவள்கின்றிலேன்-துவண்டு நிற்கக்கூடியவனில்லை. தூய்நெறி-பரிசுத்த நெறி. எதிகட்கு இறைவன்-துறவிகளுக்குத் தலைவர். யமுனைத் துறைவன்-யமுனாசாரியர் என்ற ஆளவந்தார்.]

ஆளவந்தாரைக் கதியாகப் பெற்ற ராமானுஜர் என்னைக் காத்தருளினர்; ஆகையால் அகங்காரம் முதலிய துர்க்குணமுள்ளவர்களான நீசர்களின் வாசலைப்பற்றி நின்று 'பொருளைப் பொழிந்து தரும் மேகமே' என்றெல்லாம் தோத்திரம் செய்யக் கற்றுத் துவண்டு நிற்கமாட்டேன்.

[கார்த்திகையான்-முருகக் கடவுள். கரிமுகத்தான்-யானைமுகக் கடவுளான கணபதி. கனல்-(இங்கே) அக்கினி பகவான். முக்கண்மூர்த்தி-சிவபெருமான். மோடி-துர்க்காதேவி. வெப்பு-(இங்கே) ஜ்வரத்தின் அதிதேவதை. மூவுலகும் பூத்தவன்-மூன்று லோகங்களையும் நாபி கமலத்தில் மலரச் செய்தவனே. பாணன்-பாணாசுரன். தீர்த்தன்-குணசுத்தியுள்ள கண்ணபிரான். சேமவைப்பு-சேமநிதி.]

பாணாசுரனுக்குப் பரிந்து வந்த அக்கினி, ஜ்வரதேவதை, காளி முதலானவர்களையெல்லாம் வென்று, அவர்கள் தோத்திரம் செய்ய அவர்களுக்காகப் பாணாசுரனுடைய பிழைகளைப் பொறுத்தருளிய கண்ணபிரானை ஏத்தும் ராமாநுஜர் எனக்கு ஆபத்துத் துணையாகிய சேமநிதியாவர்.

## 118. மோஹனம் தாளம் : ஆதி (2 களைச் சவுக்கம்.)

(பாட்டு 21—ம் 22—ம்)

; — கா தப கரீ, ஸ ஸ ஸ்ா ஸ்ா ஸ்ா ரிக ரிஸ ஸத | ·த பா ரிஸ ஸத ஸரீ | கா கஸ ரிக கா =
நிதி . யைப் . . பொ ழி யும் மு கி . லென்... | று . நீ . . சர்தம் | வா சல். பற் . றி ‖

; — க க தப பா பக தப பக கரிரீ | ரிஸ ஸரீ கா, தப கரி | ஸரி ஸரி கப ரிக ரிஸ ஸா ‖
து தி கற் . று ல. கி . . . ற்று . வ்ர் | தின் றி . லே னி. னி. | தாய் . கெ. . . றி . சேர் . . ‖

; — பா தஸ் தப பக ; ப தா தா ப பத தஸ் | ஸ்ா ஸ்ா ரிக் ரிஸ் ஸ்ா ஸ் | ஸ் த ரிஸ் ஸ்த தப பா தஸ் ‖
எ தி . கட் . . . . கிறை வன். ய . மு . | ணைத் துறை . வன். . இ | ணை . ய . . . டி . யாம் . . ‖

தா — பத க்ரி ஸ்ா ஸ்த ரிஸ் ஸ்த தப பத | ; ; த் ரி ஸ்ா, த தப | க க தப கப கரி ‖
. — கதி பெ. ற் றுடைய இ. . . ரா. மா. | . . னு . ச னென்னே. | கா . த்த. ன. னே ‖

ஸரீ — ஸரி க கா பா பா, தஸ் பத | பா க க பா தஸ் தப | க க தப பக கரி ரீ ‖
. . — கார் . த்திகை யா னும் க . ரி . | . மு க த் தா . . னும். | க ன லும் . . . மு . க்கண் ‖

;— ஸரி கப தப கரி ஸா ஸரி கப கரி ஸா ஸ த ரிஸ ஸத | ·த பா ·தஸ ரி கா | ரிக பக பா பா ‖
.— மூர் . த்தி . . . யும் . . மோ . . . டி . . யு ம். வை . . . | ப்பும். முது கிட்டு | . மூ . வு ல கு ம் ‖

;—பா தஸ் தப பஸ் ஸ்த பக கப தா தா ப பத ஸ்ா ஸ்த | ஸ்ா ஸ்ரிக்ா ரிஸ் ஸ்ா ஸ் | ஸ்த ரிஸ் ஸ்த தப பத ‖
.—பூ . . த்த . வ . னே. . . யென் . . று . போ . . ற்றி. | ட வர். . ணான் . பி | மை பொ. . . று . த்த. ‖

;—பத ஸ் ரிக்ப் ஸ்ரி ஸ்ா ஸ்ா, த தஸ் ரிஸ் தப பத | தா தரீ ஸ்ாரி தாஸ் பா. கா பத ஸ்ா தப பக தப ‖
.—திர். த் த . . னே. . யே . . த்து . மி . ரா. மா. | . னு . ச . னென் . றன் சே ம . . வை. ப்பே . . . ‖

ரீ ஸரீ —
. . . . — (நிதியை)



கவர்னர்ஜெனரல் ராஜாஜியோடு சென்னை கவர்னரும், லேடி நையும், சென்னை மந்திரிகளும் சேர்ந்தாப்போல் எடுத்துக்கொண்ட படம்.



சென்னையில் எதிராஜ் கல்லூரிக்கு அஸ்திவாரக் கல்லை நாட்டுவித்த கவர்னர் ஜெனரல் ராஜாஜியை மாணவிகள் வரிசையாக நின்று வரவேற்பளித்தார்கள்.



# மெய் விளங்கிய அன்பர்கள்

## பெரிய புராணப் பூங்கோயிலில்

17

## 'சொல்லுவது அறியேன்'

★

பி. ஸ்ரீ.

'பொன்னி நன்னாடு' என்று சோழ தேசத்திற்குப் பெருமை: தியாக மூர்த்தியான சிபிச்சக்கிரவர்த்தியின் பரம்பரையில்வந்த 'செம்பியர்' என்றுசோழ மன்னருக்கு ஒரு பெருமை. இத்தகைய சோழநாட்டிலே சோலைகள் சூழ்ந்து வீதிகள்சிறந்து விளங்கிய பழையாறை என்னும் பழம் பதியில் அமர்நீதியார் என்ற செல்வர், அடியார்களை அமுதுசெய்வித்து அவரவர் குறிப்பறிந்து தம் செல்வத்தைத் தொண்டுகளுக்குப் பயன்படுத்திவந்தார்.

### பிரம்மசாரி

திருநல்லூர் என்னும் சிவஸ்தலத்திலே நடைபெறும் திருவிழாவைக் கண்டு களிக்க அடியவர் பலர் அங்கே போவது வழக்கம். அங்கே அவர்களுக்குப் பசி தீர்க்கும்பொருட்டு அமர்நீதியார் ஒரு மடம் கட்டிவைத்து, தம் சுற்றத்தவர்களுடன் தாமும் அதில் தங்கித் தொண்டுகளைக் குறைவற ஆற்றிவரலானார்.

அப்போது ஒருநாள் அங்கே ஒரு பிரம்மசாரி வந்தார். அவரை அமர்நீதியார், மன மகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் உபசரித்து வணங்கி, 'சுவாமி, தேவரீர் எழுந்தருளி வருவதற்கு அடியேன் யாது தவம் செய்தேனோ?' என்றார்.

### சொட்டச் சொட்ட

'அடியார்களை அமுதுசெய்வித்து ஆடைகள் முதலியன கொடுக்கிறீர் என்று கேள்வியுற்றுத்தான் உம்மைக்காண விரும்பி வந்தோம்' என்று பிரம்மசாரி சொல்லிவிட்டு, 'காவேரியில் நீராடி வருவோம். ஒருவேளை மழைவரினும் வரும் இந்த உலர்ந்த கௌபீனத்தை வைத்திருந்து கொடும்' என்று அதை அமர்நீதியாரிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார். இப்படிச் சொல்லிப் போனவர் மழையில் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டு திரும்பி வருவதைச் சேக்கிழார் பக்திச் சுவை சொட்டச் சொட்ட வருணிக்கிறார்:

**பானல் அந்துறைப் பொன்னிநீர்**
**படிந்துவந் தாரோ?**
**தூநறுஞ்சடைக் கங்கைநீர்**
**தோய்ந்துவந் தாரோ?**
**வான நீர்மழை மொழிந்திட**
**நனைந்துவந்(து) அணைந்தார்**

[பானல் அம்துறை - நீலோற்பலம் மலர்ந்திருந்த அழகிய கரையையுடைய. பொன்னி - காவிரி. வானம் - மேகம்.]

### முரண்டு

இப்படிக் காவிரி நீரிலும், தம் சடையிலுள்ள கங்கை நீரிலும் (மாறுவேடம் பூண்ட சிவபெருமான்தானே!) மழை நீரிலும் ஆடிவந்தவர்,

**தொண்டர் அன்பெனும் தூயநீர்**
**ஆடுதல் வேண்டி,**

அன்பரை நோக்கி, 'ஈரம் மாற்ற வேண்டும். உம்மிடத்திலே தந்ததைக் கொண்டுவாரும்' என்றாராம். ஆனால் வைத்திருந்த இடத்தில் அமர்நீதியார் அதைக் கண்டாரில்லை. தேடினார், திகைத்தார்: அங்கும் இங்கும் ஓடினார், அலைந்தார். வேறொரு நல்ல கௌபீனம் கொண்டுவந்து, 'அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளும்' என்று பிரார்த்தித்தார்.

பிரம்மசாரியோ ஒரே பிடிவாதமாய் முரண்டு பண்ணும் குழந்தைபோல் தாம் கொடுத்ததே திரும்பவேண்டும் என்றார். பொன்னும் பட்டாடைகளும் இரத்தினங்களும் தருவதாகவும் அமர்நீதி சொல்லிப் பார்த்தார். அதற்குப் பிரம்மசாரியார் கோபம் தணிந்தவர்போல், 'எனக்குப் பட்டும் பொன்னும் இரத்தினங்களும் எதற்காக? இதற்கு ஒத்த நிறையுள்ள கௌபீனம் நிறுத்துக்கொடும்' என்று பதில் சொன்னார்.

### அதிசயத் தராசு

அமர்நீதியார் மனமகிழ்ந்து ஒரு தராசை நாட்டினார். ஒரு தட்டில் பிரம்மசாரி வைத்ததற்கு ஈடாக அமர்நீதி மற்றொரு தட்டில் எத்தனையோ ஆடைகளை

யும் பட்டுக்களையும் இட்டு இட்டுப் பார்த்தும், தட்டு ஒத்துவரவில்லை. பொதி பொதியாக இட்டுப் பார்த்தும், குவியல் குவியலாகப் பொன், வெள்ளி முதலிய உலோகங்களை வைத்துப் பார்த்தும், தட்டு நேர் நிற்கவில்லையாம்.

கடைசியாக, அமர்நீதியார் தம் மனைவியுடனும் மைந்தருடனும் தட்டில் ஏறி நின்றபோதுதான் தட்டுகள் நேர் நின்றனவாம்.

**மதிவி ளங்கிய தொண்டர்தம்**
**பெருமையை, மண்ணோர்**
**துதிசெய்(து) எங்கணும் அதிச**
**உற,எதிர் தொழுதார். [யம்**

[மதி-(இங்கே) மெய்யறிவு.]

பிரம்மசாரி உமாதேவியாருடன் ரிஷப வாகனத்தின் மேல் தோன்றுகிறார். ஆம், உமாபதியே அப்படி,

**வஞ்ச வல்வினைக் கறுப்பறும்**
**மனத்தடி யார்கள்**
**நெஞ்சில் நீங்கிடா அடிமலர்**
**நீள் நிலம் பொலிய,**

[கறுப்பு அறும் — களங்கம் அறுத்த.]

வந்து, இத்தொண்டரின் அன்பெனும் பரிசுத்த நெறியை வெளிப்படுத்திக்காட்டினாராம்.

### வந்த செல்வத்தின் வளத்தினால் வரும் பயன்

கொள்வதற்கு உபாயம் அடியார் கருத்தறிந்துஉதவுவதுதான். என்பதை அமர்நீதிநாயனார் வாயிலாகச் செல்வர்களுக்கு வற்புறுத்தவே இந்த நாடகம் ஆடினாராம் சிவபெருமான்.

* * * *

அடியார்களுக்காக எத்தகைய தியாகமும் செய்யப் பின் வாங்கலாகாது என்ற உண்மையை அமர்நீதி நாயனார் கதையைக் காட்டிலும் வற்புறுத்திக் காட்டுவது இயற்பகை நாயனார் கதை. அமர்நீதியாரைப்போல் இயற்பகையாரும் பெருஞ் செல்வரான வைசியர் தாம். இவர் சோழதேசத்துக் காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்தவர். இருவரும் அடியவர் எவராயினும், அவர் விரும்புவது எதுவாயினும் இல்லையென்னாது கொடுத்து வந்தார்.



## மிகக் கொடிய பரீட்சை

அமர்நீதிநாயனாரைக்காட்டிலும் இயற்பகை நாயனாரைச் சிவபெருமான் மிகவும் கடுமையான பரீட்சைக்கு உட்படுத்திவிட்டாராம். "எந்தை எம்பிரான் அடியவர் அணைந்தார்" என்று அன்போடு எதிர்வந்து வணங்கிய அடியவரை நோக்கி,

**'மன்னு காதல்உன்**
**மனைவியை வேண்டி'**

வந்ததாகத் துணிந்து காமுகர் போலக் கூறினாராம். பக்திக் காதலுக்கு உரியரான பெருமான் இப்படிக் கேட்டதற்கும் 'இல்லையே என்னாத இயற்கை', இல்லையென்று சொல்லவில்லையாம்.

## ஒப்பற்ற வெற்றி

காமுகராக வந்த சிவபெருமானுடன் தம் மனைவியையும் அழைத்துக்கொண்டு இயற்கை சாய்க்காடு என்னும் சிவஸ்தலத்திற்கு அருகே போனபோது பெருமான், 'இனி நீர் திரும்பிப் போகலாம்' என்று சொன்னாராம். இயற்பகையார் மனைவியை விட்டுத் திரும்பியதும், பெருமான் 'இயற்பகை முனிவா!' என்று அழைத்தாராம். அந்த மிகக் கடுமையான சோதனையில் முழு வெற்றி பெற்றுவிட்டார் இயற்பகையார் என்பதைச் சிவபெருமான் ஒப்புக்கொள்கிறார்.

சிவபெருமான் பயந்தவர்போல் கூவியழைப்பதைச் சேக்கிழார் எவ்வளவு அருமையாகப் பாடுகிறார், கேளுங்கள்:

**'இயற்பகை முனிவா! ஓலம்;**
**ஈண்டநீ வருவாய் ஓலம்;**
**அயர்ப்பிலா தானே! ஓலம்;**
**அன்பனே! ஓலம் ஓலம்;**
**செயற்கருஞ் செய்கை செய்த**
**தீரனே! ஓலம்' என்றான்,**
**மயக்கறு மறைஒ லிட்டு**
**மாலயன் தேட நின்றான்.**

[ஓலம் – அபயம்; அச்சத்திலிருந்து விடுதலை அடையக் கூப்பிடுவது. அயர்ப்பு-மறப்பு.]

அழைத்த ஓசை கேட்டு, 'அடியேன் வந்தேன் தங்களுக்குத் துன்பம் செய்பவர்கள் இன்னும் இருக்கிறார்களா? தொலேத்து விடுகிறேன்' என்று முழங்கிக்கொண்டு விரைந்தோடி வருகிறார் இயற்பகையார். காமுகரைக் கண்டாரில்லே; தம் காதலி யாரைக் கண்டார். உயரப் பார்த்தார். பொன் குன்று வெள்ளிக் குன்றின்மேல் தோன்றுகிறது. பெருமான் தேவியோடு வானில் காட்சியளிக்கக் கண்டார்.

இயற்பகையாரால் அக்காட்சியைப் பார்த்துக் கொண்டு நிற்க முடியவில்லே. நிலத்தில் விழுந்தார், எழுந்தார்.

**சொல்லுவ(து) அறியேன் வாழி;**
**தோற்றிய தோற்றம் போற்றி;**
**வல்லேவந்(து) அருளி என்னே**
**வழித்தொண்டு கொண்டாய் போற்றி;**
**எல்லேயில் இன்ப வெள்ளம்**
**எனக்கருள் செய்தாய் போற்றி**

[வல்லே-விரைவாக. வழித்தொண்டு – வழி வழியாக வரும் தொண்டு.] என்று போற்றினார்.

'இயற்பகை' யென்ற இவர்பெயரே, இவர் செய்த செயற்கருஞ் செய்கை மனித இயலே மீறியதாகும் என்பதை உணர்த்துகிறது.

* * * *

அமர்நீதி நாயனாரின் தியாகம் புராணப் பிரசித்திபெற்ற சிபிச்சக்கிரவர்த்தியின் கதையை நினேப்பூட்டுகிறது. இயற்பகையின் தியாகமோ புராணக் கற்பனேகளேயும் கடந்து செல்கிறது. இக்கதைகளின் நிகழ்ச்சி-விவரங்களே மறந்து உட்பொருளே நினேத்துப் பார்த்தால், பெரிய புராணம் எத்தகைய பெரிய லட்சியங்களுக்கெல்லாம் பொக்கிஷமாயிருக்கிறது என்பது புலனாகும்.



இயற்பகை நாயனார் காட்டும் லட்சியத்தைப் பரிகசிப்பது எளிது. ஆனால் இதன் உட்பொருளேப் பக்திக் கண்ணுடன் உற்று நோக்குவோர் என்ன சொல்லக்கூடும்?

சொல்லுவ(து) அறியேன் வாழி! என்று இந் நாயனார் தாம் கண்ட தெய்வத் தோற்றத்தை வாழ்த்தினாரே, அப்படியேதான் பக்தர்களும் இந்த லட்சியத் தோற்றத்தை வாழ்த்துவார்கள்; போற்றுவார்கள்.

---


## "சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு
### சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

| | இந்தியா சிலோன் | வெளிநாடு |
|---|---|---|
| 1-வருஷம் | 13 0 | 18 0 |
| 6-மாதம் | 7 0 | 9 8 |
| 3-மாதம் | 3 12 | 5 0 |

தனிப்பிரதி அணு 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.


## ஞாபகப்படுத்துகிறோம்

★

" சுதேசமித்திரன் " வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அலல. அவை முற்றிலும் கற்பனேயே.

—ஆசிரியர்.





(மேல்)

மயிலை மாதர்கள் சங்கத்துக்கு ராஜாஜி விஜயம் செய்தபோது ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் அவருக்கு மாலை சூட்டி வரவேற்றார்.

(கீழ்)

இயற்கை வர்ணங்களில் படமெடுக்கப்பட்ட நடிகைகளில் உலகத்திலேயே முதன்மை ஸ்தானத்தை வகிக்கும் மிஸ் டிகார்லோ கையில் பை சகிதம் நடந்து வருகிறார். கனடாவில் பிறந்த இப்பெண் உலகிலே மிகச் சிறந்த அழகி.



# நாமொன்று நினைக்க——.

ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.

ராமநாதன் வீட்டிற்கு வரும்போது எல்லோரும் போஜனத்திற்கு உட்கார்ந்துவிட்டார்கள். மதுரப்பாட்டி தான் ஒட்டுக்கேட்டு அறிந்துகொண்டிருந்த செக் விருத்தாந்தத்தை சிவராமனிடம் முன்னதாகவே பரிமாறியிருந்தாள்.

சிவராமனின் குற்றச்சாட்டுகளை வெங்கிடசுப்பையர் லேசாகக் காதில் வாங்கிக்கொண்டார். சங்கரி அம்மாள் சமாதானம் சொன்னதுபோல் அவரும் சிவராமனுக்குச் சமாதானம் சொன்னார்.

“நீங்கள் சொல்லுகிறபடி அத்திம்பேரே! கடிதம் எழுதினவன் பள்ளிக்கூடத்து மாணவனாயிருந்தால் உபேக்ஷித்துவிடலாம். வீட்டில் இருப்பவனே எழுதியிருந்தால் அதற்கு இடம் கொடுக்காதவண்ணம் மண்டையில் தட்டிவிட வேண்டாமா?”

“சிவராமா! ஸீதாராமனைப் பற்றியவரையில் இது வீண் சந்தேகம். ராமனாதன் எழுதியிருந்தால் உனக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் அல்லவா?”

“ராமனாதனுக்கு நண்பன் போலிருந்து துரோகம் செய்யவே வந்திருக்கும் ஸீதாராமனை நீங்கள் அணைத்துப் பேசுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. செல்லத்தை ராமனாதனுக்குக் கொடுப்பதென்று நிச்சயம் செய்யப்பட்டிருப்பது அவனுக்குத் தெரியாதா! அவளை இவன் ஸ்மரிக்கலாமா? என்ன ஆபாஸமான காதல் கடிதம்? “மித்ர துரோகிக்ருதக்னச்ச” என்று சொல்லப்படும் கோஷ்டியில் சேர்ந்தவனல்லவா அவன்? அவனை வீட்டில் வைத்துக் கொள்ளலாமா? இது இந்தக் காதல் கடிதத்துடன் நிற்கப் போகிறதா! பணம் காசுக்கு அவனை நம்பியிருக்கிறீர்கள்! என்றைக்கு அவன் போர்ஜரி பண்ணிப் பணத்தைக் கொள்ளையிட்டு உங்கள் தலையில் கையை வைக்கப் போகிறானோ! அப்படி நடக்கிறவரையில் நீங்களும் என் வார்த்தையை மதிக்கமாட்டீர்கள். அவன் அப்பன் ஒரு பெரிய ஆஷாடபூதி. பிள்ளை இங்கேயிருப்பதில் தனக்கு ராஜ்ய பிராப்தி ஏற்பட்டால்போல் தலைகால் தெரியாமல் குதித்துக் கொண்டிருக்கிறான். அல்பனுக்கு திடீரென்று பெருமையைக் கொடுத்துவிட்டால், அவன் எதற்குத்தான் துணிவான் என்ற எல்லை கிடையாது. இதையெல்லாம் சொல்லப்போனால். சிவராமன் பொல்லாதவன். அந்தப் பயல் வீட்டிலிருந்தால், இனி செல்லத்தை இங்கே விட்டு வைப்பதற்கு எனக்குத்தைரியமில்லை. நான் அக்காவிடத்தில், ஊரிலிருந்து வந்தவுடன் இதைத்தான் சொன்னேன். நான் சந்தேகித்ததற்கு ஏற்றாப்போல் காதல் கடிதம் கையில் கிடைத்து விட்டது. காந்திமதி சொல்வதுபோல் ஆளைக் கண்டுபிடிக்க தஸ்தாவேஜி அகப்பட்டுக் கொண்டது. பண விஷயத்திலும் அவன் மோசடி செய்து ராமனாதன் தலையில் வைக்காமல்



போனால் என் பெயர் சிவராமன் இல்லை. ராமனாதன் வரட்டும். அவனிடமும் அவன் 'நண்பன்' யோக்கியதையைப்பற்றிக் கேட்போம்–''

ராமனாதன் இதைக் கேட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தான். அவன் மனம் விகாரமடைந்திருந்தது. பயமும் தவிப்பும் மிதமிஞ்சி எழுந்தன.

சிவராமன் பேசுமுன் வெங்கிட சுப்பையர் "ஏன் இவ்வளவு நாழி?'' என்று அவனைக் கேட்டார்.

"ஸீதாராமன் எங்கே'' என்றார் சிவராமன்.

"காலேஜில் ஒரு மீட்டிங். பீச்சுவழியாய்நடந்து வந்தேன்'' என்று தகப்பனாருக்குப் பதில் சொன்னான் ராமனாதன்.

"ஸீதாராமனும் வந்துவிட்டானா?'' என்று கேட்டார் வெங்கிட சுப்பையர்.

"அவன் வரவில்லை.''

"ஏன்''

"அவன் ரயிலுக்குப் போனான்?''

"என்ன விசேஷம்?''

"ஊரில் இருந்து தந்தி வந்ததாம்''

"என்ன தந்தி''

"அவன் அப்பாவிடமிருந்து வந்ததாகச் சொன்னான்''

"நீ தந்தியைப் பார்த்தாயா?''

"இல்லை. அவன் சொன்னதுதான்.''

"ஏன்? வீட்டிற்கு வந்துவிட்டு ஊருக்குப் போகக்கூடாதோ?''

"சாயங்காலம்தான் தந்தி வந்ததுபோலிருக்கு?''

"பள்ளிக்கூடத்திற்கா தந்தி வந்தது?''

"அப்படித்தான் தெரிகிறது.''



"அவன் அப்பாவுக்கு என்ன உடம்பு?''

"தெரியாது.''

சிவராமன் இடைவெளி கிடைத்ததும் பேசலானார்.—

"அவன் அப்பாவை இரண்டு நாள் முன் நான் பார்க்கும்போது கொட்டாப்புளியாட்டமாயிருந்தார். அந்தத் தெருவில் அவர் போடுகிற சத்தம் எங்கள் தெருவில் வந்து கேட்டது. அதற்குள் என்ன கேடு வந்துவிட்டது. கடைசியில் நான் சொன்னதுதான் ருசுவாகப் போகிறது. இந்தக் கடிதம் என் கவனத்திற்குச் செல்லத்தினால் கொண்டு வரப்படும் என்று அவன் பயந்துகொண்டிருக்கலாம். மற்றொரு விஷயம் நீங்கள் சொல்லாத போனாலும் எனக்குக் காதில் படாமலில்லை ஆள் ஆதாயத்துடன்தான் ஓடியிருக்கிறான்.—''

பரிமாறிக்கொண்டிருந்த மதுரப்பாட்டி சிவராமனை அரைக் கால் கண்ணால் பார்த்தாள். சங்கரியின் கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்து மதுரத்தைக் கூர்மையாய் நோக்கின. வெங்கிட சுப்பையர் ஒன்றும் பேசவில்லை.

சாப்பாட்டிற்குப் பிறகு வெங்கட சுப்பையர் ராமனாதனைக் கூப்பிட்டுத் தன் டிராயரில் செக் புஸ்தகத்தைத் தேடி எடுத்து வரும்படி சொன்னார்.

கோமதி யகமுடையான் காந்திமதியின் கல்யாணம் செட்டில் செய்யும் விஷயமாய் ரூபாய் ஆயிரம் அட்வான்ஸு அனுப்பும்படி எழுதியிருப்பதாயும், அதற்குச் செக் எழுதி போஸ்டில் அனுப்புவதற்காக ராமனாதனிடம் கொடுத்துவிடுவதாயும் சொன்னார்.

ராமனாதன் செக் புஸ்தகத்தை சிறிது நேரத்தில் எடுத்து வந்தான்.

வெங்கிட சுப்பையர், "நான் தேடினபோது எனக்கு இது அகப்படவில்லை!'' என்று சொல்லிக்கொண்டு, கிழிக்கப்பட்டிருக்கும் செக்கை ராமனாதனிடம் காண்பித்து, "இது யாரால் கிழிக்கப்பட்டது'' என்று கேட்டார்.

ராமனாதன் தானும் ஆச்சரியப்படுபவன்போல் அபினயித்து "எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று பதில் சொன்னான்.

சிவராமன் முகம் மலர்ந்தது. வீரம் விசும்பியது. இடி முழக்கம் போன்ற த்வனியில் பேசலானார்.

"இவனைக் கேட்டு என்ன பிரயோசனம்? போர்ஜரி செக்கினால் பாங்கை மோசம் பண்ணிப் பணம் பெற்றுக்கொண்டவன், இவனிடத்திலா உண்மையைச் சொல்லியிருப்பான்? வீட்டிற்குக்கூட வர முடியாமல் காலேஜிலிருந்தபடி ரயிலுக்குப்போன அவசரம் என்ன என்று இப்போது புரிகிறதல்லவா? ராமனாதா நீ சற்று முன்னால் வந்திருக்கக்கூடாதா! இப்போதும் என்ன கெட்டுப் போச்சு? இந்தத் தகவலைப் போலீஸில் தெரிவித்து, ஒரு அதிகாரியைக் கூட்டிக்கொண்டு உடனே ரயில்வேஸ்டேஷனுக்குப் போனால்

கையும் களவுமாய் ஆளைப் பிடித்துவிடலாம்.

ராமனுதா—கூப்பிடு ஒரு டாக்ஸியை. நம்முடைய டிரைவர் இருக்கமாட்டான். போலீஸில் தெரிவிக்க அக்கா அத்திம்பேர்கள் மறுத்ததால் சிவராமன் தானே ஸ்டேஷனுக்குப் போய் துப்பறிவதாய் கூறிவிட்டு டாக்ஸி ஒன்றை உடனே வருவித்து அதில் ஏறிக்கொண்டார்.

"அப்படி போட்மெயில் அவனுக்குக் கிடைத்து அவன் போயிருந்தாலும் ஊருக்குப்போய் அவனை நாளைக்கே கொண்டுவந்து நிறுத்திவிடுகிறேன்," என்று உரக்கப் பிரதிக்ஞை செய்தார். டாக்ஸி நகர்ந்தது.

"சிவராமா! அவசரப்பட்டு ஒன்றும் செய்யாதே. நான் பொறுப்பு ஏற்றுக்கொள்ளமாட்டேன். பணம்போனால் போகிறது ஸீதாராமன் குற்றவாளியல்ல. ஜாக்கிரதையாய் நடந்துகொள்" என்று கடைசியாய் வெங்கிடசுப்பையர் எச்சரித்தார்.

சிவராமன் வெறுப்புச் சிரிப்புச் சிரித்தது அவர் காதில் படவில்லை டிராது.

( தொடரும் )

## ராஜாஜிக்கு மயிலை ஸ்திரீகள் சங்க வரவேற்பு



மயிலாப்பூர் ஸ்திரீகள் சங்கத்துக்குக் கவர்னர் ஜெனரல் ராஜாஜி விஜயம் செய்தபோது அவருக்கு சங்க அங்கத்தினர்கள் அளித்த வரவேற்பு




## இதுவரையில்...

[எட்டாம் நூற்றுண்டிலே ராஜஸிம்ம பாண்டியன் ஒரு சக்கரவர்த்தியாக ஆட்சி செலுத்தி வந்தான். இவன் கங்கராஜனை வென்று அவனுடைய மகளான பூசுந்தரியை மணந்து பட்ட மகிஷியாக்கிக்கொண்டிருந்தான். தெற்கே சேரனையும் வென்று தயாள குணத்துடன் அவனுக்கு வேண்டிய உதவிகளும் செய்திருந்தான். எனினும், சேரன் பாண்டிய சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்து கன்னியாகுமரியை ஒட்டியிருக்கும் நாஞ்சில் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். பாண்டியன் மீண்டும் படையெடுத்துப் போய் சேரனை அடக்கி, அவனிடம் மறுபடியும் தயாளமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவனைத் தனக்கு ஒரு சேனபதியாகவும், மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டான். சேரனே கெட்ட எண்ணத்தை விட்டுவிடவில்லை. ஒரு பௌத்த பிட்சுவுடன் சூழ்ச்சி செய்து, பாண்டிய வீர மன்னனுக்கு அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்யும் வியாஜத்தால், பாண்டி நாட்டில் குழப்பம் உண்டாக்கவும், பாண்டியனுள்ளத்தைக் கெடுக்கவும் முயல்கிறுன். இந்நிலையில் இராஜ புரோகிதரான செல்வநம்பி ஒரு பண்டித சபை கூட்டி, மன்னனுக்கு ஆறுதல் அளிக்க எத்தனிக்கிருர். இச் சபைக்கு எப்படியாவது ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரை அழைத்து வரவேண்டுமென்று அரசனும், அரசியும், ஒருவருக்கொருவர் தெரியாத நிலையில் மாறுவேடம் பூண்டு போய்க் காரியசித்தி பெறுகிருர்கள். இது பௌத்த பிட்சு முதலானவர்களுக்குப் பொருமையுண்டாக்குகிறது.]

## 21

## கொடும்பை யுத்தம்

'கலகக்காரர்கள் மூலைக்கு மூலை மறைவாக இருந்து தாக்கி, நமக்கு நஷ்டம் விளைத்து வருகிருர்கள். அவர்களையெல்லாம் ஒரே களத்தில் சந்திக்க முடியுமானல் நாம் வெற்றி பெறுவது எளிது' என்று எண்ணமிட்டான் வில்லி. அதே எண்ணத்துடன் மாறங்காரியும் ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு, மாறுவேடத்தில் கலகபூமியான பன்றி நாட்டிலே சஞ்சரித்துக்கொண்டிருந்தார்.

* * * *

கலகக்காரர்கள் செல்வம் நிறைந்த ஒரு கிராமத்தைக் கொள்ளையடித்துவிட்டு வண்டிகளில் ஏராளமான தனதானியங்களை ஏற்றிக் கொண்டு ஒரு காட்டு வழியாக வந்துகொண்டிருந்தார்கள். வண்டிகளுக்கு முன்னும் பின்னும் உருவிய கத்திகளுடன் பாராக் கொடுத்து வந்தனர் கலகக்காரர் பலர். அவர்களுக்குத் தலைவன் சந்நியாசியுடையில் குதிரை சவாரி செய்தவண்ணம் வந்துகொண்டிருந்தான்.

இரவு நேரம், நல்ல நிலா. அந்த வழியிலே வில்லி ஒரு பெரும் படையுடன் முகாம் போட்டிருந்தான். அதே வழியில் வருகிருர்களே, அந்தச் செய்தி இவர்களுக்குத் தெரியாதா? ஒரே ஒருவன் தவிர, மற்றவர்களுக்கெல்லாம் தெரியாதுதான்!

அப்படியானல், தெரிந்தவன் மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்து வேறு வழியாக அவர்களைச் செலுத்தியிருக்கலாகாதா? அப்படிச் செய்திருக்கக்கூடும்; ஆனல் அவன் செய்யவில்லை. அவனேதான் தலைமைபூண்டு இந்த அபாய வழியிலே அழைத்து வருகிருன்! கலகக்காரர்கள் அட்டகாசமாய் வந்து கொண்டிருக்கிருர்கள். கடகடவென்று மாட்டு வண்டிகளும், படபடவென்று வாள் வீரர்களும் வந்துகொண்டிருக்கிருர்கள். அவர்களுக்குமுன் சிறிது வேகமாகவே குதிரைமேல் வந்த சன்னியாசி வந்துகொண்டிருக்கிருன்.

தன் பாடி வீட்டிலிருந்து வில்லி பார்த்து விடுகிருன். குதிரைமீது வந்த சன்னியாசியையும்,

அவனுக்குப் பின்னே வந்துகொண்டிருந்த வாள் வீரர்களையும், வண்டிகளையும் அந்த வழிக்கு இருபுறமும் வில்லியின் படைவீரர்கள் காட்டு மரங்களையும், புதர்களையும் ஒட்டிக் குடிசைகள் அமைத்துக்கொண்டிருந்தனர். வில்லியின் ஒரு சமிக்ஞை போதும், அவர்களெல்லாம் கொள்ளைக்காரர்களைச் சூழ்ந்து கொள்வதற்கு.

இன்றிரவு நமக்கு அதிர்ஷ்டம்தான்! குதிரை மேல் வருகிறவன் ஒரு முக்கியமான பேர்வழியாக இருக்கக்கூடும். அவன் மூலமாக உளவு தெரிந்து, கலகக்காரர்களை முற்றும் முறியடிக்க வழி செய்யவும் கூடும் என்ற எண்ணத்துடன், வில்லி தன் கையிலுள்ள உடுக்கை அடித்துச் சில ஒலி-பேதங்களை உண்டுபண்ணினன்.

திடீரென்று அந்தக் காடெல்லாம் உயிர்பெற்றதுபோலவும், புலிகள் பதிபோட்டுப் பாய்ந்து வருவது போலவும் ஒருகணம் தோன்றியது. அடுத்தகணமே வில்லும் வேலும் வாளும் வண்டிகளையும், வாள்வீரர்களையும் சூழ்ந்து கொண்டன. 'ஐயோ, வஞ்சிக்கப்பட்டோம்!' என்று சொல்லிக்கொண்டே ஒரு கிழவனர் வண்டியொன்றிலிருந்து கீழே இறங்கினர்.

'ஆம், ஆம், வஞ்சிக்கப்பட்டோம். எனினும் ஒரு கை பார்ப்போம். அடி, பிடி, விடாதே, கொல்லு, கொல்லு' என்று அட்டகாசம் செய்தான் குதிரைமேலிருந்த சன்னியாசி. எனினும் அந்தக் கலகக்கூட்டம் கலக்கமடைந்து கலகலத்துப்போய் அப்படியே செயலற்று நின்றுவிட்டது. எதிர்த்த சிலர் விரைவில் யமனுலகிற்கு அனுப்பப்பட்டனர். மற்றவர்களெல்லாம் உத்ஸாகம் குன்றிச் சரணடைந்தனர். ஓடத்துணிந்த சிலரையும், வில்லியின் படைவீரர்கள் மடக்கிப் பிடித்துக்கொண்டுவந்து விட்டார்கள்.

குதிரை மீதிருந்த சன்னியாசி குதிரையிலிருந்து குதித்து, வண்டிக்குள்ளிருந்து இறங்கி நடந்ததையெல்லாம் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த கிழத் துறவியைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு வந்தார். அப்போது தங்களையும் பிடித்துக் கட்டமுயன்ற சில படைவீரர்களை அதட்டி எட்ட நிற்கச் செய்துவிட்டு, 'நாங்களே வருகிறோம் உங்கள் தலைவரிடம்; சன்னியாசிகளின் தலைவரான இப்பெரியாருக்கும் மதிப்பில்லையா? சாதாரணக் கலகக்காரர்களைப் போல் எங்களையும் கட்டிப்போடலாமா?' என்று சொல்லிக்கொண்டே வில்லி நின்றுகொண்டிருந்த இடத்திற்கு வந்தார் குதிரை வீரனை சன்னியாசி.

வில்லி நின்றுகொண்டிருந்த மேட்டிற்கு அருகே வந்ததும், கிழச்சன்னியாசி பின்வாங்கி நின்றுவிட முயன்ருர். ஆனல் குதிரை வீரர் பிடித்த கைப்பிடியை விடாமல், 'தலைவரிடம் போனால்தான் நம்மைக் கௌரவமாக நடத்துவார்கள். அப்படியில்லாவிட்டால் இந்த முரட்டு படைவீரர்கள் நம்மையும் கௌரவக் குறைவாய் நடத்துவார்கள்; கால்களிலும் கைகளிலும் விலங்குகளை மாட்டவும் கூசமாட்டார்கள்' என்று சொல்லிக்கொண்டே, கிழவரையும் இழுத்துச்சென்று, வில்லி நின்றுகொண்டிருந்த மேட்டிலே தூக்கிவிட்டார்.

வில்லி அந்த நிலவில் அந்த இரண்டு சன்னியாசிகளையும் கூர்ந்து பார்த்தான். கிழத் துறவியை அவன் நோக்கியதும், குதிரை வீரரான சன்னியாசி, 'தளபதியாரே! தெரியவில்லையா? பெரியார் ஆனந்த தீர்த்தரல்லவா? இவரது பெருமைக்குத் தகுந்த அளவில் இந்த அஹிம்ஸா தர்மமூர்த்தியை நடத்தும்படியாகத் தாங்கள் தங்கள் படைவீரர்களுக்குக் கட்டளையிட வேணும்' என்ருர். அந்தத் துணிவான பேச்சைக் கேட்டுத் திகைத்துப் போயினர் அருகேயிருந்த படைவீரர்களெல்லாம்.

'என்ன? தோற்றவராகவா பேசுகிருர்? கைதியாகவா காண்கிருர்?' என்று சிலர் அதிசயித்தார்கள். இந்த 'அதிகப்பிரசங்கத்திற்கு என்ன தண்டனை கொடுக்கப் போகிருரோ தளபதியார்?' என்ற பிரமிப்புடன் அந்த உத்தரவை எதிர்பார்த்திருந்தார்கள் சில படைவீரர்கள். சிலர் அந்தக் கிழச்சன்னியாசியை நோக்கியவண்ணம், 'இந்தக் கிழடு இந்தக் கொள்ளைக்கூட்டத்தில் எப்படி அகப்பட்டுக் கொண்டது!' என்று அதிசயித்தார்கள். சிற்சில படைவீரர்களோ 'ஆனந்ததீர்த்தர்' என்ற பெயரைக் கேட்டு அந்த முகத்தையும் பார்த்து, 'கொல்லாமை போதிக்கும் குருமூர்த்தியல்லவா?' என்று பிரமித்தார்கள்.

இந்தப் பிரமிப்புகளுக்கெல்லாம் மேலான பிரமிப்பை உண்டாக்கியது மேட்டின்மேல் தோன்றிய காட்சி. ஆனந்த தீர்த்தரை அறிமுகப்படுத்திய சன்னியாசியின் அடிகளில் விழுந்து வில்லி வணங்கினன். அந்தச் சன்னியாசி தளபதியை முடிபிடித்து எழச்செய்து தழுவிக்கொண்டார்.

'இப்படி என்னையும் மோசஞ் செய்யலாமா?' என்ருன் வில்லி.

'அது போகட்டும், இனி ஒரே சண்டையில் மோசத்திற்கெல்லாம் முடிவுதான். சேரன் தோற்கப்போகிருன். நமது பாண்டிய சக்கரவர்த்தி வெற்றி சூடப்போகிருர் என்ருர் மந்திரி மாறங்காரி. ஆம், மாறுவேடம் பூண்டுவந்த குதிரை வீரச் சன்னியாசி மாறங்காரிதான்.

இரகசியமாக ஒரு படை வீரனின் காதில் ஆனந்ததீர்த்தரைக் குறித்த தன் கட்டளையைச் சொல்லிவிட்டு, வில்லியும், மாறங்காரியும் பாடி



வீட்டிற்குள் போய்விட்டார்கள். ஆனந்த தீர்த்தரோ 'இப்படியெல்லாம் மோசம் செய்வதுதான் பாகவத தருமமோ?' என்று முணு முணுத்துக்கொண்டே தலை குனிந்தவண்ணம் படை வீரர்களுடன் சென்றார்.

கைது செய்யப்பட்டவர்களெல்லாம் பத்துப் பத்துப் பேராகவும், நூறு நூறு பேராகவும் அவரவர் நிலைமைக்குத் தக்க பந்தோபஸ்து களுடன் மதுரைக்கு அனுப்பப்பட்டனர். சில கலகக்காரர்களை இருவர் இருவராகவும், ஒவ்வொருவராகவும் பந்தோபஸ்துடன் அனுப்பி வைத்தார்கள். ஆனந்ததீர்த்தரை விசேஷ பந்தோபஸ்துடன் ஒரு குதிரை வீரன் அழைத்துப்போனான். ஆனால் அவரை விசேஷ மரியாதையுடனும் ஒரு பல்லக்கில் அழைத்துப் போனான், உதவித் தளபதிகளில் ஒருவனான அக்குதிரை வீரன். ஆம், அதுதான் வில்லியின் இரகசியமான கட்டளை.

உளவர் தலைவனான நரஸிம்மனுடைய உதவி பெற்றுத்தான் மாறங்காரி பன்றிநாட்டில் நாட்டுப்புறங்களிலும் காட்டுப்புறங்களிலும் உள்ள சன்னியாசிக் கலகத்தினர்—கும்பல்களின் விவகாரங்களை நன்றாகத் தெரிந்துகொண்டனர். இருவரும் பௌத்தத் துறவிகளைப்போல் வேடம் பூண்டு கலகக்காரர்களிடையே சஞ்சரித்து அவர்களை உத்ஸாகப்படுத்துவதுபோல், பாண்டியப் பிரதேசத்திற்கும், இப்போது ஒரு பாண்டிய மாகாணமாயிருந்த சோழநாட்டுக்கும் இடையேயுள்ள அந்த எல்லைப் பிரதேசத்தில் எதிரிகளுக்கிருந்த வசதிக்குறைவுகளையும் தெளிவாகத் தெரிந்துகொண்டார்கள்.

ஆனந்ததிர்த்தருக்கு ஒருவகையிலும் சந்தேகம் ஏற்படக்கூடாதென்றுதான் சில கொள்ளைக் கூட்டங்களுடன் மாறங்காரியும் நரஸிம்மனும் போய்வரத் தொடங்கினார்கள். எனினும் "நரஸிம்மனைக் குறித்து ஆனந்த தீர்த்தர் சந்தேகிக்கிறாரோ?' என்ற சந்தேகமும் மாறங்காரிக்கு வந்துவிட்டது. ஆகவே, 'இனி அவரைக் கைதியாக்கிவிட வேண்டியது' என்ற எண்ணத்தோடு தான் மாறங்காரி சூழ்ச்சிசெய்து, வில்லியிருந்த

வழியாக ஒரு கூட்டத்தையே அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்.

பாடி வீட்டில் மாறங்காரி சிரமபரிகாரம் செய்துகொண்டபின் வில்லியை நோக்கி, 'இனி நடக்கப்போவது கொடும்பையில் தான். அது முடிவான போராகவே இருக்கும்' என்றார்.

அதுகேட்ட வில்லி ஆச்சரியத்துடன், 'நம்முடைய மூவாயிரம் படைவீரர்களை எதிரிகள் அழித்துவிட்டார்களே, அந்தக் கொடும்பாளூரிலா?' என்று கேட்டான்.

'ஆம், ஆம்; மதுரையிலிருந்து உறையூருக்குப் போகும் ராஜ பாதையிலுள்ள நமது பழைய ராணுவ ஸ்தலமாகிய அந்தக் கொடும்பையிலேயே நாம் எதிரிகளை முறியடிக்கப் போகிறோம்?'

'அந்தத்திட்டத்தை ஒருவேளை அவர்கள் மாற்றிவிட்டால்?'

'அந்தத் திட்டத்தில் ஒரு மாறுதலும் ஏற்படாதபடி நரஸிம்மன் பார்த்துக்கொள்வான்.'

'அப்படியானால் கொடும்பைக்கே நம்முடைய படைகளை அனுப்பிவிடலாமா?'

'இப்போதே அந்த ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பிக்கலாம், இந்தப்போரில் அரசரும் கலந்துகொள்வார்.'

'அவருக்கு எப்படித் தெரியும்?'

'ஏற்கெனவே தூதர் மூலம் செய்தி அனுப்பி விட்டேன்.'

'இன்னும் ஒரே கேள்வி. மன்னிக்க வேணும். நரஸிம்மன் இப்போது அந்தக்கலகக்காரர்களிடையேதான் இருக்கிறானா? என்ன செய்து கொண்டிருக்கிறான்?'

'இப்போது கொடும்பைக்கு அருகே கலகக்காரர்களை உத்ஸாகப்படுத்திக்கொண்டிருக்கிறான்!'

'ஏன் அப்படி?'

'பாண்டிய மகாராஜ்யம் என்ற பறவைக் கூட்டைக் கலைத்துவிடுவோம்' என்று கர்ஜிக்கிறான். "சகோதரர்களே! சந்தர்ப்பம் வந்துவிட்டது. எவர் நம்முடைய பரம குருவோ, எவர் அஹிம்ஸா தர்மக்களஞ்சியமோ, எவர் பழைய பௌத்த தர்மத்தை நிலைநாட்டத் தம்மையும் நம்மையும் அர்ப்பணம் செய்திருக்கிறாரோ, எவரை நாம் ஸாக்ஷாத் புத்த பகவானின் அவதாரமென்று போற்றுகிறோமோ, எவர் நம் சேரமகாராஜாவின் விடுதலைக்குத் திட்டமிட்டு வேலை செய்து வந்திருக்கிறாரோ, அவரையும் அவருடைய புதிய சீடரையும் கைதியாக்கி விட்டார்கள். அப்படிப்பட்ட எதிரிகளை நாம் ஒழித்துவிடுவோம். முன்பு மூவாயிரவரை ஒழித்த அதே கொடும்பையில் இப்போது பாண்டியபலம் முழுமையும் ஒழித்துவிடுவோம்" என்றெல்லாம் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறான்.

இது கேட்ட வில்லிக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'வில்லியாரே! திகைக்கவேண்டாம். நம்முடைய காரியத்தைத்தான் பரம ராஜபக்தியுடன் நரஸிம்மன் அப்படியெல்லாம் செய்துகொண்டிருக்கிறான்! நீர் போர்வீரர்; அவன் உளவு வீரன் அல்லவா?' என்றார் மாறங்காரி.

பிறகு மாறங்காரி தாம் ஒரு படையுடன் பன்றிமலையென்ற பழனிமலைக்குப் புறப்பட்டார். அங்கே கலகக்காரர்கள் சேமித்து வைத்திருக்கும் ஏராளமான பொருள்களையும், ஆயுதங்களையும் உடனே கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதும், அந்த ஆயுதங்களையும் பயன்படுத்திக்கொண்டு வில்லிக்குப் படைத் துணையாக வந்து உதவவேண்டுமென்பதும் மந்திரியாரின் புதிய திட்டம்.

* * * *

கொடும்பையில் கடும் போர் மூண்டது. சேரனே தலைமைவகித்துப் படைகளை நடத்தி வந்தான். அந்தப் படையிலுள்ள சன்னியாசிகளில் பலரும் வில் வித்தையில் தேர்ந்தவர்கள். பொறுக்கியெடுத்த வில்லாளர்களைப் படைகளின் முன்னணியில் வேலிபோல் அமைத்திருந்தான் சேரன். அந்த வில்லாளர்கள், வில்லியின் படைகள் தங்களை அணுகவொட்டாமல் அம்புகளைத் தூவியவண்ணமாயிருந்தனர்.

இப்படிச் சண்டை நடந்துகொண்டிருக்கும் போதே, பாண்டிய மன்னனே தலைமைவகித்துச் சில படைகளை நடத்திக்கொண்டு வேறொரு புறமாக வந்து சேரனின் படைகளைத் தாக்கினான். வில்லியின் தாக்குதலாலும், பாண்டியனின் தாக்குதலாலும், சேரனுடைய வில்-வேலி அழிந்தது. உடனே வேல்-வீரர்கள் பாண்டியனின் குதிரைப்படைகளை எதிர்த்துக் குழப்பம் விளைக்க முயன்றனர். பாண்டியன் அவர்களோடு நெருங்கிப் போர்செய்து கொண்டிருக்கையில், பாண்டியனின் குதிரையைக் குறிவைத்து அம்பால் அடித்து வீழ்த்திவிட்டான் எதிரி ஒருவன்.



பாண்டியன் நின்ற நிலையிலே வாளுங் கையுமாகப் போர் செய்து கொண்டிருந்தான். போர்க்களத்தின் அந்தப் பகுதியில் பெருங்குழப்பம் ஏற்பட்டுவிட்டது. பாண்டியன் முன் வைத்த காலைப் பின் வாங்காது தைரிய சாகஸச் செயல்கள் செய்து கொண்டிருக்கும் போதே, ஒருவன் பின்புறமாக வந்துகொண்டிருந்தான். அவன் பாண்டிய வீரர்களைப் போல் ராணுவ சின்னங்களை அணிந்திருந்தான், அவன் அரசனுக்குப் பக்கபலமாக வருகிறான் என்றே தளபதி வில்லியும் எண்ணிவிட்டான்.

ஆனால் அவன் பாண்டியன் கழுத்துக்கு நேரே திடீரென்று வாளை வீச முயன்றான். அந்நிலையில் ஒரு குதிரைவீரன் பளிச்சென்று தன் குதிரைச்சவுக்கால் வாள் பிடித்த கை துடிக்கும்படி ஓங்கி அடிக்க, அந்த வாள் கீழே விழுந்து விட்டது. பாண்டியனுடைய வீரர்கள் அந்தத் துரோகியைக் கைதியாக்கிவிட்டார்கள்.

இதற்குள், பன்றி மலையிலுள்ள ஆயுதங்களையும் வசப்படுத்திக்கொண்டு மாறங்காரியும் சில படைகளுடன் வந்து தாக்கவே, சேரனுடைய படைகள் சிதறி ஓடத் தலைப்பட்டன. ஆனால் வில்லி ஏற்கெனவே நாலு திசைகளிலும் வைத்திருந்த படைகள் தோற்றவர்களைச் சூழ்ந்து கொண்டு வதஞ் செய்யத் தொடங்கின.

பாண்டியனும், மாறங்காரியும் வில்லியும் அநாவசியமாய் வதம் நடைபெறுவதைத் தடுத்து விட்டார்கள். பிறகு கொடும்பைக் கோட்டையில் முக்கியமான கைதிகளை அடைத்துவைத்தார்கள். சில முக்கியமான கைதிகளை மட்டும் மதுரைக்கு முன் கூட்டிலே அனுப்பிவிட்டார்கள், அரசனும், மந்திரியும்.

அப்போது மாறங்காரி அரசனை நோக்கி, 'தண்டனைக்கு உரியவர்களைப் பின்னால் விசாரித்துக்கொள்ளலாம். ஆனால் தங்கள் உயிரைக் காப்பாற்றிய வீரனை முதன்முதல் சம்மானிப்பது அவசியம்' என்றார்.

'ஆம், ஆம்; அந்த வீரன் எங்கே?' என்று அரசன் கேட்டான். ஆனால் அந்த வீரனைக் காணவில்லை. தன் மனைவியான பூசுந்தரி தேவி அப்போது அங்கே வந்து சேர்ந்தாள். அவளைக் கண்டதும் பாண்டியனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அந்த ஆச்சரியத்தையும் வென்றுவிட்டது, 'இந்த அம்மாள்தான் அந்தத் துரோகியிடமிருந்து தங்கள் உயிரைக் காப்பாற்றியது!' என்று வில்லி சொன்னபோது தோன்றிய ஆச்சரியம்.

'அந்த வீரனுக்கு என்ன சம்மானம் செய்யக்கூடும்?' என்று ஆலோசனையில் ஆழ்ந்துவிட்டதுபோலிருந்த அரசனை நோக்கிப் பூசுந்தரி, 'சம்மானம் தளபதி வில்லியாருக்கே உரியது. அவருடைய அனுமதிதான் எனக்கும் இத்தகைய சந்தர்ப்பத்தை அளித்தது' என்றாள்.

மாறங்காரியும் அரசியாரின் அபிப்ராயத்தை ஆதரித்து, 'தளபதி வில்லிக்கே விசேஷ சம்மானம் உரியது' என்றார்.

'நமது வில்லிக்கும் நாம் செய்யக்கூடிய விசேஷ சம்மானமும் உண்டோ?' என்று அரசன் கேட்டது, 'ஆம், அது குறித்து என் வேண்டுகோளை மதுரையில் தெரிவித்துக்கொள்ள அனுமதி தரவேண்டும்' என்றான் வில்லி.

ஆனால் நரஸிம்மன் எங்கே? அவனைப்பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை. அது வெற்றிக் களிப்பையும் பாதித்தது, கைதிகளையெல்லாம் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

இதற்குள் பாண்டியனைப் பின்புறமாகத் தந்திரமாய்க் கொல்ல வந்தவன் சேரன்தான் என்பதும் தெரிந்துவிட்டது. நரஸிம்மனைக் குறித்துக் கைதியாகிவிட்ட சேரனிடம் விசாரித்துப் பார்த்தும் பயனில்லை. 'அந்தப் பரம துரோகி எங்களை மோசஞ் செய்துவிட்டு எங்கே போய்விட்டானோ? இனி உங்களையும் மோசஞ் செய்வதற்கு என்ன என்ன முயற்சிகளை எங்கெங்கோ செய்துகொண்டிருக்கிறானோ?' என்று சொல்லிவிட்டு அதற்குமேல் தனக்கு ஒன்றும் தெரியாதென்று சாதித்துவிட்டான்.

(தொடரும்)




மாயவரத்திலிருந்து விழுப்புரம் வரைக்கும் ஒரு காரியமாகப் போய்க்கொண்டிருந்தேன். ரயில் வண்டியில் ஒரே கூட்டம். காலை பதினொரு மணிக்கு வண்டியும் சிதம்பரம் வந்தடைந்தது. பிரயாணிகள் மேலும் முண்டியடித்துக்கொண்டு ஏறினார்கள். வண்டியில் உட்கார்ந்திருப்பவர்களைக்காட்டிலும் நின்று தவம் பண்ணிக்கொண்டிருந்தவர்கள் தான் அதிகம் என்று சொல்ல வேண்டும். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வண்டியும் நகர்ந்துவிட்டது.

ஸ்டேஷனை விட்டு வண்டி ஒரு பர்லாங்குத்தூரம் வந்திருக்கும். வண்டியின் அந்த நெருக்கத்திலும், ஒரு பிச்சைக்காரி வந்து முளைத்துவிட்டாள். தனக்குத் தெரிந்த பாட்டுகள் எதெது உண்டோ அவைகளைப் பாடிக்கொண்டு கையை நீட்டி பிச்சை கேட்டுக்கொண்டிருந்தாள். ஓரிருவர் காலணாக் காசுகளை அவள் கையில் வீசி எறிந்தனர்.

அவள் ஒரு அபூர்வ பிச்சைக்காரியாகத் தோற்றமளித்தாள். நானும் எத்தனையோ வகைப் பிச்சைக்காரர்களைப் பார்த்திருக்கிறேன். அவளை அந்தக் கோஷ்டியில் சேர்க்கமுடியாது.

அவளுக்கு இருபத்தைந்து வயதுதானிருக்கும். தன்னுடைய வறுமையிலும், உடுத்திருந்தக் கந்தையிலும் அவள் தோற்றம் வசீகரமுடையதாகவே இருந்தது.

அவளும் இரண்டு பாட்டுகள் பாடி முடித்திருப்பாள். அவள் கையிலும் நான்கு காலணாக்கள் [illegible] சேர்ந்திருக்கும். ரயில் வண்டியும் அடுத்த ஸ்டேஷனில் நின்றது.

ரயில் வண்டியின் வேறு பெட்டியில் மாறுவதற்காக அவளும் கீழே இறங்கினாள். எதில் போய் ஏறலாம் என்ற யோசனையுடன் அவளும் வண்டியின் ஓரமாகவே நடந்துகொண்டிருந்தாள். அதற்குள் வண்டியும் நகருவதற்கு மணியடித்தாகிவிட்டது. அவளும் ஒரு பெட்டியில் ஏற எத்தனித்தாள்.

திடீரென்று ஒரு அதட்டல் சப்தம் கேட்டது. ஒரு ரயில்வே அதிகாரி பின்புறமிருந்து அவளை நோக்கி ஓடி வந்தார்; அவளும் மலைத்து அங்கேயே நின்றுவிட்டாள். வண்டியும் அவளைத் தாண்டி நகர்ந்துவிட்டது.

அவள் முகத்தில் ஒரு பெரிய ஏமாற்றத்தின் அறிகுறி நன்கு தென்பட்டது. அவள் உதடு அசைந்தது. வாய் ஏதோ முணுமுணுத்தது. என்ன நினைத்தாளோ? யாரை நிந்தித்தாளோ? ஸ்டேஷனை அடுத்து அருகில் இருந்த ஒரு ஆலமரத்தை நோக்கி அதன் நிழலில் தஞ்சமடையும் பொருட்டுப் போய்க்கொண்டிருந்தாள்.

"பாவம்! அவள் யாரோ? இளம் வயதிலேயே அவளும் ஒரு பிச்சைக்காரி? இதற்கு யார் பொறுப்பாளி? இன்னும் எத்தனை காலம் இம்மாதிரி தன் வழ்க்கையை அந்தப் பிச்சைக்காரி தள்ள வேண்டுமோ?" என்ற சிந்தனையில் என் மனமிறங்கியது. [illegible] ளோ அவளும், ஆலமரமும், கண்ணிலிருந்து மறையும்வரை பார்த்துக்கொண்டேயிருந்தன.

* * *

நான் போன காரியம் முடிந்து இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு வந்த வழியே திரும்பினேன். மீண்டும் அந்தப் பிச்சைக்காரியைப்பற்றியே மனம் சிந்தித்துக்கொண்டிருந்தது. அவள் எங்கு போயிருப்பாள்? ரயில் வண்டியில் ஏறுவதும், இறக்கி விடப்படுவதுமாகவே அவள் வாழ்க்கைக் கழிந்துகொண்டிருக்குமோ?

நான் வண்டி ஏறியதும், எனக்கு அத்தனை கூட்டத்திலும், நெருக்கத்திலும், மிலிடரி உடையில் இருந்த ஒருவர் தன் பக்கத்திலேயே இடம் ஒதுக்கிக்கொடுத்தார். நானும் மகிழ்ச்சியுடன் உட்கார்ந்துவிட்டேன். என் மனதையும் இந்தப் புதிய மனிதர் கவர்ந்துவிட்டார். பல நாள் பழகியவர் போல் என்னுடன் பேசவும் ஆரம்பித்துவிட்டார்.

ஐந்து வருஷங்களாகப் பட்டாளத்தில் சேர்ந்து எங்கெங்கோ வெல்லாம் போய் "மிலிடரி சர்விஸ்" பண்ணிவிட்டு கடைசியாக வீட்டுக்குத்திரும்பி வந்துகொண்டிருந்தார். சண்டையும் முடிந்துவிட்டது. அவரையும் அனுப்பிவிட்டார்களாம். மூன்று வருஷகாலம் யுத்தக் கைதியாகப் பகைவர் கையில் அகப்பட்டு, படாத அவஸ்தையெல்லாம் பட்டுவிட்டு, இப்பொழுதுதான் வீட்டுக்குத் திரும்புகிறாராம். தன் வீட்டு விஷயம் ஒன்றும் அவருக்கு

இந்த மூன்று வருஷகாலமாகத் தெரியாதாம். கடிதப் போக்கு வரத்தே இல்லாமல் இருந்து விட்டதாம்.

அவருக்கு வயது முப்பத்தைந்து இருக்கும். சொந்த ஊர் திருநெல்வேலி சீமையில் நாங்குனேரி என்று சொன்னார். அவருக்கு ஒரு தமையன் உண்டு. தாயாரும் இருக்கிறாள். அவரும், அவர் தமையனும் ஒரே குடும்பமாக இருந்தார்கள். அவர் அண்ணனுக்கு மூன்று குழந்தைகள். அவர் வீட்டை விட்டு வரும்போது அவருக்கும் இரண்டு வயதில் ஒரு ஆண் குழந்தை. ஏதோ ஐந்தாவது வரைக்கும் படித்திருந்தார். அதற்குத் தகுந்தாற்போல் பட்டாளத்தில் அவருக்கு வேலை கிடைத்தது.

அவர் 'மிலிடரி'யில் சேர்ந்தது முதற்கொண்டு சர்க்காராக வீட்டுக்கு மாதம் முப்பது ரூபாய் வீதம் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். அவரும் தான் வாங்கும் சம்பளத்தில் எப்படியோ மீதம் பிடித்து ஒவ்வொரு மாதமும் தவறாமல் பத்தோ பதினைந்தோ தமையன் பேருக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். இந்த ஐந்து வருஷங்களாக அவர் தம் மனுஷாளையும், மனைவி மக்களையும் பார்க்க வேண்டுமென்று 'லீவ்' வாங்கிக் கொண்டு ஒரு முறைகூட வரவேயில்லை. தம் வீட்டு ஜனங்களை எல்லாம் பார்க்கவேண்டுமென்று ஒரே ஆவலாக வந்துகொண்டிருந்தார்.

அவருடன் நடத்திய சம்பாஷணையிலிருந்து அவரைப்பற்றியும், அவருடைய குடும்பத்தைப் பற்றியும் நான் தெரிந்துகொண்டு விட்டேன். அவர் இன்னும் வேறு எதை எதைப்பற்றியோ பேசிக் கொண்டு வந்தார். அவர் தன்னுடையப் பேச்சினால், வண்டியில் உட்கார்ந்திருந்த அனைவரையுமே ஆகர்ஷித்துக்கொண்டிருந்தார். நானும் அந்த ரயில் சிநேகிதருடன்கூட மாயவரம் வரைக்கும் போகலாம், பிரயாணம் அலுப்பு மிருக்காது என்று எண்ணி சந்தோஷப்பட்டேன்.

இந்த சந்தோஷம் கொஞ்ச நேரந்தான் நிலைத்திருந்தது. ஒரு மன முருக்கும் காட்சி எல்லோர் இருதயங்களையும் கலக்கி இளக்கி விட்டது.

* * * *

திருப்பாப்புலியூர் ஸ்டேஷனில் ரயில் வண்டி நின்றது. ஸ்டேஷனுக்கு அப்பால் வண்டியின் மறுபக்கம் எட்டிப் பார்த்தேன். என் கண்களை நம்பவே முடியவில்லை. எவளைப்பற்றி என் மனம் கவலைப்பட்டுக்கொண்டிருந்ததோ, அவளை அங்கே பார்த்துவிட்டேன். அந்தப் பிச்சைக்காரிதான் அங்கு நின்றுகொண்டிருந்தாள். "அவள் எந்தப் பெட்டிற்குள் போய் ஏறிக்கொள்ளப் போகிறாளோ?" என்ற சிந்தனையுடன் அப்படியே தலையை வெளியே நீட்டி நின்றுகொண்டிருந்தேன். மிலிடரி நண்பரோ 'பிளாட்பாரம்' பக்கம் பார்த்துக்கொண்டிருந்தார்.

வண்டி நகருவதற்கு மணியும் அடித்துவிட்டார்கள். அதுவும் சப்தமிட்டுக்கொண்டு கிளம்பிற்று. நான் எதிர்பாராதவிதமாய், நாங்கள் உட்கார்ந்திருந்தப் பெட்டிற்குள்ளேயே அவள் ஏறி விட்டாள்! நானும் இப்பொழுது எனக்கு சொந்தமான வேறொரு பெஞ்சில் நண்பருக்கு எதிரில் உட்கார்ந்தேன்.

ரயில் வண்டியும் தனக்கே உரிய வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அந்த நண்பரும் மீண்டும் ஏதாவது தன் பேச்சைத் தொடங்குவார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அந்தப் பிச்சைக்காரி கதவு ஓரத்திலிருந்து எங்கள் பார்வையில் விழும்படியான இடத்திற்கு வந்து விட்டாள்.

"இந்தத்தடவை அவள் கதி என்னவாகுமோ? எங்கு மறுபடியும் இறக்கிவிடப் படுவாளோ?" என்ற நினைப்பில் ஈடுபட்டிருந்தேன். வெகு சீக்கிரத்திலேயே என் சிந்தனை கலைந்து விட்டது.



"ஐயோ! பட்டு நீயா?" என்று மிலிடரி நண்பர் அவளைப் பார்த்துக் கூவினர். "அத்தான்" என்று சொன்னவள் அப்படியே மூர்ச்சித்துவிட்டாள். எனக்கு இது ஒன்றுமே புரியவில்லை, அவள் அவருக்கு எந்த முறையில் உறவாயிருப்பாள்?

கொஞ்சங் கொஞ்சமாக அவள் தன் நினைவிற்கு வந்துகொண்டிருந்தாள். மிலிடரி நண்பர் "இந்த அநியாயத்தைத்தான் பாருங்கள்! நான் யாருக்காகப் படாத பாடுபட்டு, அண்ணன் பேருக்கு பணம் அனுப்பி வைத்தேனே, அவளின் கதி இப்படியாகவா இருக்கும்? அனுப்பிய பணத்தைப் பெற்றுக்கொண்ட வரைக்கும் பெற்றுக்கொண்டு விட்டு அவளை அடித்து வெளியில் துரத்தியிருக்கிருர்கள்.' என்று மிகவும் படபடப்புடனும், ஆத்திரத்துடனும் பேசிக்கொண்டு போனர்.

அவளும், தான் அவருடைய அண்ணனிடத்திலும், தாயிடத்திலும் பட்டகஷ்டத்தைப் பற்றி விவரமாக சொல்லிக்கொண்டு வந்தாள். "ஒருநாள் உங்கள் அண்ணன் என்னை நன்ருக அடித்து வெளியில் பிடித்துத் தள்ளிவிட்டார். வீட்டிற்குள் காலடி வைத்தால் வெட்டிவிடுவேன்' என்று பயமுறுத்தி விரட்டிவிட்டார். ஆத்தாளும் செத்துப்போய் இரண்டு வருஷமாகிறது. எனக்குப் போக்கிடமேது? இப்படியே காலத்தைத் தள்ளிக்கொண்டு வந்துவிட்டேன். பையனை மட்டும் அவர்கள் நிறுத்தி வைத்துக்கொண்டார்கள். அவனைக் கிழவி பத்திரமாகப் பார்த்து வளர்த்துக்கொண்டு வருகிறது என்று அங்கிருந்து வருபவர்கள் மூலம் அறிந்துகொண்டேன்" என்று கூறியழுதாள். அவர் கண்களிலும் கண்ணீர் கசிந்தது அவருக்கு வருத்தத்தைவிட, அவர் அண்ணன் பேரில் கோபம்தான் பற்றிக்கொண்டு வந்தது.

அவளுக்கு ஏற்பட்ட துன்பமும் எத்தகையது? என்ன அநீதி செய்துவிட்டார்கள்? பட்டாளத்தில் சேர்ந்த அவள் கணவன் எங்கேயோ கண்காணுத தேசத்தில் அகப்பட்டுக்கொண்டு, இனி திரும்பி வரவேமாட்டான் என்று அவர்களும் நினைத்துவிட்டார்கள் வீணுக அவளுக்கும் ஏன் சாப்பாடு போடவேண்டும் என்று விரட்டி அடித்துவிட்டார்கள்!

பட்டாளத்தில் சேர்ந்து இத்தனை காலமாக வெளியிலிருந்துவிட்டு வரும் அந்த மனிதரும் என்னென்ன ஆசைகள் வைத்துக்கொண்டிருக்கமாட்டார்? தன்னுடைய ஆசை மனைவியையும், அருமைப் புத்திரனையும் பார்க்க வேண்டுமென்று எவ்வளவு பரபரப்பாக வந்துகொண்டிருப்பார்? வருகிற வழியிலேயே, ஓடுகிற ரயில் வண்டியிலேயே தன் மனைவியை—அதுவும் ஒரு பிச்சைக்காரியாக—பார்ப்பது என்ருல் அவருடைய வேதனையை எப்படி விவரிக்க முடியும்? தான் ஒரு பக்கம், தன் மனைவி ஒரு பக்கம். மைந்தன் ஒருபக்கம் என்ற நிலைமை ஏற்பட்டது எவ்வளவு பரிதாபகரமானது! மீண்டும் அவர் கண்களிலிருந்து "பொல பொல"வென்று கண்ணீர் வழிந்தது. தன்னுடைய மனைவியின் மீது அத்தகைய அன்பு வைத்திருந்தார்.

"நான் பாவி! உன்னைவிட்டுப் பிரிந்துபோயிருக்கவே கூடாது. அந்த மிருகங்களிடத்திலும் உன்னை விட்டிருக்கக்கூடாது. அனுப்பிய பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு இப்படியும் துரோகம் செய்துவிடுவார்களா? அண்ணனு அவன்? நான் போய் நேரில் விசாரித்துக்கொள்கிறேன். இதுவரையில் நீ உயிரை வைத்துக்கொண்டிருக்கிருயே, அதுவே நான் கொடுத்துவைத்தப் பாக்கியம்" என்று வருத்தத்துடனும் கோபத்துடனும் சொல்லிக்கொண்டே தன் மூட்டையை அவிழ்த்தார். மூட்டையில் புதிதாக வாங்கிவைத்திருந்த புடவையையும், ரவிக்கையையும் அவளிடம் கொடுத்தார்.

அவளுக்கு இப்பொழுது மட்டற்றமகிழ்ச்சி. தான் இழந்திருந்த 'பொருளை' மீண்டும் பெற்றுவிட்டாள். இனி அவளுக்குப்பயமில்லை — தொல்லையில்லை—கவலையில்லை. அண்டி அணைப்பதற்குப் பிரிந்த கணவனும் கூடிவிட்டான். அவளுடைய அழுகையிலும், வருத்திலும், தன்னுடைய கணவனைக் கண்டு கூடிவிட்டோம் என்ற மகிழ்ச்சி நன்கு புலனுயிற்று. அவளுடைய கணவனும் யுத்தக் கைதியாக இருந்து படாத அவஸ்தைப்பட்டுவிட்டார். அவளையும் கொடுமை படுத்தி, கஷ்ட ஜீவனம் பண்ணும்படியான நிலைக்கு



அடித்து விரட்டிவிட்டார்கள். இத்தனை கஷ்டத்திற்குப்பிறகு வெகுநாட்களுக்குப்பிறகு அவர்கள் சந்திக்கும்போது, ஏற்படும் மகிழ்ச்சி எல்லை கடந்ததாய்த்தானிருக்கும்!

வண்டியில் உட்கார்ந்திருந்தவர்கள் மிலிடரி நண்பரைப் பார்த்து "ஊருக்குப்போய் அண்ணனிடம் சண்டை சச்சரவு வைத்துக்கொள்ளவேண்டாம். நியாயமாகத் தனிக் குடித்தனம் வைத்துக் கிடைத்ததைச் சாப்பிட்டு காலத்தைத் தள்ளுங்கள். உங்களை மோசம் செய்து அவர்கள் எவ்வளவு நாளைக்கு வாழ்ந்துவிடப் போகிறார்கள்?" என்று கூறி புத்திமதி சொன்னார்கள்.

அவளுடையப் பிச்சைக்காரித் தோற்றமும் மறைந்துவிட்டது. நண்பரும் அவளுக்காக ஒரு டிக்கட் வாங்கிவிட்டார்.

நானும் மாயவரத்தில் இறங்கிவிட்டேன். அந்த மிலிடரி நண்பரைப் பிரிய மனமில்லை. அவரும் ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுவதாக என் விலாசத்தை வாங்கிக் கொண்டார். அந்தப் பிச்சைக்காரியைப்பற்றி என் மனதில் ஏற்பட்டிருந்த பாரமும் இறங்கிவிட்டது. "இனியாகிலும் அவ்விருவரும் இன்பமாக வாழட்டும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டே வீட்டைப் போய் அடைந்தேன்.

---

(வலது)

உலகிலேயே மிகப் பிரும்மாண்டமான தரை விமானமிது. 125 டன் எடையுள்ளது. இறக்கைகள் 230 அடி; நீளம் 17ം அடி. இதன் பெயர் பிரபஸான். பிரிஸ்டலில் தயாரிக்கப்பட்ட பிரிட்டிஷ் விமானம்.



அமெரிக்காவில் புதிய இந்திய தூதராக நியமனம்பெற்றுள்ள ஸர் ராமராவும் அவரது மனைவியும் குமாரி காந்தாவும்.



# சிற்பியின் யுக்தி

பி. ஸி. பார்வதி

வீரசிம்ம மகாராஜா, தான் ஒரு போரில் அடைந்த வெற்றிக்கு அறிகுறியாக தன் சிலை ஒன்றை செதுக்கச் செய்து தன் தலைநகரில் சந்தை கூடுமிடத்தில் எல்லோரும் பார்க்கும்படி அதை ஒரு இடத்தில் வைக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்.

மேற்கூறிய கட்டளையை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய எண்ணி, அரண்மனை பிரபுக்கள், அத்தேசத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு சிற்பியை நாடி அரசரின் கட்டளையை வெளியிட்டனர். சிற்பி ஆறு மாத காலத்தில் வேலையை முடித்துக் கொடுப்பதாக வாக்களித்தான். பிரபுக்களும் வீடு சென்றனர்.

அரசருக்கு ஆறு மாத காலம் காத்திருப்பது கடினமாகத் தோன்றியது. ஆனால் வேலை செய்யப் போதிய அவகாசம் கொடுப்பது நலம் என்றறிந்து அவர் மிகவும் பொறுமையாக அந்த நாட்களைக் கடத்தினார்.

ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. ஒரு நாள் சிற்பி தன் வேலை வெற்றிகரமாக முடிவடைந்துவிட்டது என்பதை வீரசிம்மருக்கு சந்தோஷமாகத் தெரிவித்துக்கொண்டான். அரசரும் ஒரு நல்ல நேரத்தை தேர்ந்தெடுத்து தன் பிரபுக்களுடன் சிற்பியின் வேலைப்பாட்டை பார்வையிடச் சென்றார்.

சிற்பி, அரசரை வணங்கிவிட்டு சிலையின் மேல் போர்த்திருந்த துணியை எடுத்தது தான் தாமதம். அரசருக்கும் பிரபுக்களுக்கும் ஒரே ஆச்சர்யமாகப் போய்விட்டது. அவ்வளவு அழகாக இருந்தது அந்தச் சிலை! வீரசிம்மன் கம்பீரமாக தன் வெள்ளைக் குதிரையின் மேல் வீற்றிருப்பது போலவும் குதிரை தன் முன்னங் கால்களை தூக்கி, பாய்வதற்கு தயாராக நிற்பதுபோலவும் வெகு அழகாக அமைந்திருந்தது சிற்பம்.

அற்புத வேலையைக் கண்டு ஸ்தம்பித்த அரசர் சிற்பியை மனமாரப் புகழ ஆரம்பித்தார். "ஆகா! இந்த அற்புதத்தைச் செய்தவன் கைகளுக்கு தங்கப்புஷ்பங்களால் தான் அர்ச்சனை செய்யவேண்டும். சிலையின் கண்களில் தான் எவ்வளவு உணர்ச்சி ததும்புகிறது! குதிரையின் எடுப்புதான் என்னே! உயிருடன் மூச்சு விடுகிறது என்றல்லவா தோன்றுகிறது" என்று பலவாறு புகழ்ந்தார்.

வீரசிம்மர் சிற்பியை அபாரமாகப் புகழ்வதை பிரபுக்களால் சகிக்க முடியவில்லை. அவர்கள் மனதில் பொறாமை சிறிது சிறிதாக இடம்பெற ஆரம்பித்தது. அரசர் சிற்பியைப் புகழப் புகழ, அவர்களுடைய பொறாமையும் பெரிதாகிக்கொண்டே வந்தது. அதனால் அரசரின் மனதை மாற்ற எண்ணி, அரசருக்கு மிகவும் அறிமுகமான ஒரு பிரபு வெகு சகஜமாகப் பேசுவதுபோல், "அரசே, கண்களை மூடிக்கொண்டு புகழ் வார்த்தைகளை அள்ளி அள்ளி இறைத்துக்கொண்டிருக்கிறீர்களே, சற்று உற்றுப் பாருங்கள்! அந்தக் குதிரையின் காது சற்று அதிக நீளமாக இருப்பது போல் தோன்றவில்லையா? தங்களை அவமானப்படுத்தவே இந்தச்சிற்பி தங்கள் குதிரையை கழுதைபோல அமைத்திருக்கிறான்." என்றார். இப்படி இவர் கூறுவதைக் கண்ட மற்றொரு பிரபு, தானும் சற்று தைரியத்தை வரவழைத்துக்கொண்டு "அரசே! இதோ பாருங்கள் உங்கள் குதிரையின் வால் இவ்வளவு அடர்த்தியாக இல்லையே. ஆனால் இந்த சிற்பி அதன் வாலை மிகவும் அடர்த்தியாக விட்டிருக்கிறான். வால் மட்டும் சற்று பருமன், குறைவாக இருந்தால்......" என்று இழுத்தார். பொறாமை கொண்டிருந்த மற்றப் பிரபுக்களும் தத்தமக்குத் தோன்றிய குறைகளை வெகு நயமாக எடுத்துரைத்தார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொன்று சொல்லி வரவே, அரசருக்கும் சிற்பத்தில் ஏதோ குறைவிருப்பதாகப்பட்டது.

இவர்கள் பேசிக்கொள்வதை கவனமாகக் கேட்டு வந்த சிற்பி சற்று கலங்கினான். தான் ஆறுமாதகாலம் உழைத்த உழைப்பு வீண் போவது அவனுக்கு மன வருத்தத்தை அளித்தது. கலங்கிய கண்களுடன் அவன் அரசரின் ஆணைக்குக் காத்து நின்றான்.

"சிற்பி! நான் உனக்கு இன்னும் ஒரு மாதம் அவ

காசம் கொடுக்கிறேன். அதற்குள் நீ இந்த ஊனங்களை திருத்தி அமைக்காவிட்டால், என்னை அவமானப்படுத்தியதற்காக உனக்கு நல்ல தண்டனை அளிப்பேன்'' என்றார் அரசர். சிற்பியும் தன்னால் இயன்றவரை எல்லோரையும் திருப்தி செய்வதாக வாக்களித்தான்.

அன்றையிலிருந்து சிற்பி தன் வேலையை வெகு கவனமாக ஆரம்பித்தான். அவன் வீட்டின் வழியாகச் செல்லும் ஜனங்கள் சிற்பியின் அயுதங்களின் சப்தம் எப்பொழுது பார்த்தாலும் முழங்குவதைக் கேட்டு, "பாவம் நம் சிற்பி! அரசரை திருப்தி செய்ய உடல் தேய உழைக்கிறான்'' என்று பேசிக் கொண்டார்கள்.

ஒரு மாதம் சென்று மறுபடியும் சிற்பி முன்போலவே அரசருக்கு சிலையை காண்பித்தான்.

"பார்த்தீர்களா? நான் சொன்னபடி செய்தபோது சிலை எவ்வளவு அழகாக மாறிவிட்டது!'' என்று அதிசயித்தார் ஒரு பிரபு. மற்ற பிரபுக்களும் தங்களால் முயன்றவரையும் ஒவ்வொரு புகழ் வார்த்தையை மனமில்லாமல் சொல்லி வைத்தனர். மறுபடியும் குறைகூறினால் அரசர் தங்களை இலேசில் விடமாட்டார் என்று தெரிந்துகொண்ட பிரபுக்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

சிற்பி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே வந்தான். பின் ஒருவரும் குறை சொல்லாமல் பேசியது கேட்டு, "அரசே! பிரபுக்களே! நான் தங்கள் அன்பிற்குப் பாத்திரன் ஆனதில் மிக சந்தோஷம். அரசர் திருப்தி அடைந்ததால் நான் பாக்கியவான் ஆனேன்! என் ஏழு மாத உழைப்பு வீண் போகாதது கண்டு பெருமிதம் அடைகிறேன். ஆனால்.......'' என்று நிறுத்தினான்.

"ஆனால் என்ன?'' என்று எல்லோரும் ஆவலுடன் கேட்டார்கள்.

"ஆனால் போன ஒருமாத காலமாக நான் சிலையில் உள்ள பிழைகளை திருத்திக் கொண்டிருந்தேன் என்று தாங்கள் நினைப்பது தவறு. பொறாமைகொண்ட பிரபுக்கள் என்னை அவமானப்படுத்த எண்ணி குறை கண்டு பிடித்தனர் என்பதையும், சிலையில் யாதொரு பிழையும் இல்லை என்பதையும் நான் கண்டுகொண்டேன். என் ஆறுமாத உழைப்பை காப்பாற்ற வழி தேடினேன். தகரக்கூடாரத்தில் உட்கார்ந்து வெறும் ஆயுதங்களினால் சப்தம் மட்டும் எழுப்பிக்கொண்டிருந்தேன். சிலையை தீண்டவேயில்லை. நீங்களும் நான் நிஜமாக வேலை செய்கிறேன் என்று நினைத்து விட்டீர்கள். அன்றைக்கே நான் சிலையில் குற்றம் ஒன்றும் இல்லை என்று வாதித்திருந்தால் என் தலை போயிருக்கும். ஆனால் என் உயிரையும் உழைப்பையும் என் யுக்தியினால் நான் காப்பாற்றிக் கொண்டேன். முன்பு குறை கூறிய அதே சிற்பத்தைத்தான் தாங்கள் இன்று இவ்வளவு புகழ்கிறீர்கள்'' என்றான் சிற்பி.

அவமானம் தாங்காமல் பிரபுக்கள் தலை குனிந்தனர். அரசர் சிற்பியின் புத்தியையும், கைத்திறனையும் மெச்சி அவனுக்கு அநேகப் பரிசுகள் வழங்கினார்.

* * * *

சகோதரன் ஹரி,

"குலிஸ்தான்"

கார், பம்பாய் 21.



"இந்த பிளாக்மார்க்கெட்காரர்களை நாம் 'எங்க்கரேஜ்' பண்றது சுத்த தப்பு. நம்ப வாங்காட்டா அவங்களாலே எப்படி கொள்ளை லாபம் அடிக்க முடியும்னு கேக்கறேன்?''

"ஆமாமுங்க; ரொம்ப சரிங்க! சத்தியமா நான் ஒரு ஜாமானும் பிளாக் மார்க்கெட்லே வாங்கிறதில்லிங்க. ஆனா, பிளாக் மார்க்கெட்லே விப்பேனுங்க, அம்புட்டுதானுங்க!''




## ஸந்தத ஜ்வரம்

★

வைத்திய ரத்ன பண்டித
எம். துரைசாமி ஐயங்கார்

ஸந்நிபாத ஜ்வரம்போல் தொடர்ந்து அடிக்கும் ஒரு வகை ஜ்வரம் ஸந்தத ஜ்வரம் எனப்படுகிறது. இது ஸந்நிபாத ஜ்வரம்போல் பூர்வ ரூபக் குறிகள் (முற்குறிகள்) ஏதுமின்றி திடீரென்று தோன்றும் இயல்பினது. ஆரம்பத்திலிருந்தே அமைதியின்மைஅதிகம் ஏற்படும். இரவில் தூக்கம் உண்டாகாது. மனக்கலக்கமும் மண்டையிடியும் விசேஷம். வெளிச்சத்தைப் பார்க்க இயலாது. செவிகளில் கர்ணநாதம் என்னும் தலை வேதனை தரும் சப்தம் ஸங்கடமளிக்கும்.

வியாதி முழு லக்ஷணங்களோடு ஏற்பட்டுவிட்டால், இது ஸந்தத ஜ்வரம் என்பதை அனுபவமுள்ள வைத்தியர் எளிதில் அறிந்து கொள்வார். இப்பிணியாளி முதுகுப் பக்கமாகவே நிமிர்ந்து படுத்துக்கொள்ள விரும்புவான். முகத்தோற்றம் உணர்ச்சியற்றவனைப்போல் ஒருவாறு விகாரங் கொள்ளும். கண்களில் நீர் ததும்பும், முகம் அழுக்கடைந்து ஒருவாறு கறு நிறங் கொள்ளும். இவை வியாதியின் ஸாதாரண நிலைமையைக் குறிக்கும் அடையாளங்கள்.

இந்த நோய் முதிர்வடையுங்கால் பிணியாளியின் கண்கள் பாதி மூடியவாறிருக்க, வாய் திறந்தவாறிருக்கும். மேலும் தீனஸ்வரத்துடன் அவன் அலத்துவான், தானாகவே எழுந்திருக்கவோ அசைந்து படுக்கவோ சக்தியற்றவனாயிருப்பான். நாம் கேட்பதற்குப் பதிலளிக்கவும் அவனால் இயலாது. பெரும்பாலும் காது சப்தமுணராது. உதடுகளிலும், வாயினுள்ளும், ஒருவித பொறுக்குகள் உண்டாய் பற்கள் முதல் கறுத்துப்போகும். நாக்கின் ஓரங்கள் வெளிறியும், நடுப்புறம் கறுத்தும் மாப்படிந்து காணும். ஸந்நிபாத ஜ்வரத்தில் நாக்கு வெடித்துவிடும்; ஆனால் நாக்கில் காளான் படிந்துள்ள பாகமே வெடித்திருக்கும்.

சாதாரணமாய் முதல் வாரம் கடைசி வரையில் ஜ்வரவேகம் அதிகரித்து உஷ்ணம் கடுமையாயிருந்துவரும். பிறகு வியாதி குணமடையும் நிலைமையிலிருந்தால், இரண்டாம் வாரத்தில் உஷ்ணவேகம் தணிந்து, பதினைந்து நாட்களில் பெரும்பாலும் ஜ்வரத்தின் துர்க்குணங்கள் குறைந்துவிடும். நாடி நடை ஸந்நிபாத ஜ்வரத்தில் இருப்பது போல் அவ்வளவு ஒழுங்கினமாயிராவிடினும், மிக வேகமாகவும், பலஹீனத்தை மிகக் குறிப்பதாகவும் உணரப்படும். நான்காவது அல்லது ஐந்தாம் தினத்தில் இந்த நோய்க்கு இயல்பான சிலதழும்புகள் முதலில் கணுக்கையிலும், பிறகு வயிற்றின் மேலும், அதன்பிறகு மார்பிலும் தோன்றும். இந்தத் தழும்புகள் சிறு கொப்புளங்கள்போல் அல்லது சிற்றம்மைகள் போலக் காணப்படும்: பிறகு அவற்றின் நிறம் சிறிது கருநிறம் கொள்ளும்; ஆனால் பயறம்மை இராமக்கள் என்கிற அம்மைக் கோளாறாக இதைக் கருதிவிடக்கூடாது.




கிரஹஸ்தர்:—‘இரண்டு, மூணு நாளா ரேடியோவைத்திறந்தா ஒரே அபஸ்வரமாயிருக்கு .....’’

செட்டியார்:—‘‘உள்ளாரே ஏதாவது மிஷ்ட்டேக்காயிருக்கும். ரிப்பேருக்கு கொடுத்து பாக்கிறதுதானேங்க......!’’

இந்த ஜ்வரம் துவக்கும்போது சிலருக்கு சிலு சிலுப்பு குமட்டல், நாவறட்சி, பசியின்மை, தலைவலி, உடற் சோர்வு ஆகிய இவ்வருவருப்பான குறிகள் உண்டாகும். மாலை நேரம் நெருங்கும்போது சர்மத்தில் வறட்சியும், உடல் வலியும், அமைதியின்மையும் மனதில் எரித்தலும் ஏற்படுவதுண்டு. முன் குறிப்பிட்ட தழும்புகள், பெரியவர்களுக்கு ஏற்பட்டாலும், சிறுவர்களுக்கு (இவ்வியாதி கண்டால்) அவசியம் இரண்டாம் வாரத்தில் தோன்றி, வியாதி தணியுமளவும் தொடர்ந்து வரும். பொதுவாகப் பிணியாளியின் குரல் கம்மிப்போய், அவன் பேசுவது பிறர் காதில் விழுவது அரிது.

இவ்வியாதி ஸந்நிபாதஜ்வரத்தைப்போல் அபாயம் விளைவிக்கும் நிலைமையில் பால் முதலிய திரவமான உணவுகளையும் நோயாளி விழுங்கச் சக்தியற்றவனாவான். முற்றிலும் சக்தியிழந்து நீட்டிய கைகால்கள் நீட்டியபடி



புதிய டில்லியில் சமீபத்தில் நடனம் ஸ்ரீமதி ரமணியின் மாணவி, ஸ்ரீமதி என். அம்புஜாவின் சிவகெஜ்ஜை பூஜை நடன அரங்குவிழா நடைபெற்றது. சென்னை ஸங்கீத வித்வான் ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமண்யம் தலைமைவகித்தார். ஸ்ரீ பாலசுப்பிரமண்யத்துக்கு வலப்புறம் ஸ்ரீமதி சுசீலா, இடதுபுறம் ஸ்ரீமதி அம்புஜா. பாலக்காடு ஸ்ரீ மணி ஐயரும், பிடில் ஸ்ரீமான் கிருஷ்ணனும் படத்தில் இருக்கின்றனர்.

---

துணிபோல் வீழ்ந்திருப்பான். பிதற்றலும் ஏற்படும். படுக்கைத் துணிகளையும், அருகிலிருப்பவர் துணிகளையும் பிடித்துக்கொள்வான். மலத்திலும், நாசித்வாரங்களிலும், சிறுநீரிலும் இரத்தம் வெளிப்படும். உணர்ச்சியற்ற பார்வையும், பொதுவான உணர்ச்சியற்ற நிலைமையும் தோன்றும். உடலிலிருந்து ஒரு வகை துர்நாற்றம் வீசும். இவை அபாயகரமான குறிகளாம்.

இந்த ஜ்வரரோகம் ஸமானியமாய் அனுகூலமான நிலைமைக்கு வரும் அறிகுறிகளை இரண்டாம் வார இறுதியில் காணலாம். உடலில் ஏற்பட்டிருந்த தழும்புகள் மறைந்து, மற்ற துர்க்குணங்கள் மாறி அச்சமயம் நோயாளி தெளிவடையலாம், அல்லது பிராணாபாயத்திற்கு உள்ளாகலாம். ஆனால் இருபது நாட்களுக்கு முன்பு இவ்விரு நிலைமைகளில் எதுவும் முடிவாகக் காண்பதில்லை.

நோயாளிக்கு அனுகூல நிலைமை ஏற்படும்போது, ஜுரவேகம் வேளைக்கு வேளை நாளுக்கு நாள் தணிந்து, முகத்தில் ஒரு சிறிது தெளிவும் தோன்றும். சிலருக்கு ஒரே இரவில் ஜுரத்தின் முழு வேகமும் இறங்கிப்போயிருக்கும். இந்த ஸமயத்தில்கூட ரோகியின் உடலிலிருந்து இலை தழைகள் மக்கிப்போனால் ஏற்படுவது போன்ற துர்நாற்றம் கிளம்புவதுண்டு. இப்பொழுது இவ்வியாதியில் காது நன்கு கேட்காவிட்டால், அது ஓர் அனுகூலமான குறியெனக் கருதப்படவேண்டும். நாக்கில் ஈரக்கசிவு ஏற்பட்டு, பற்களிலும் நாக்கிலும் முன் கண்டிருந்த கறுநிறக் கறை முதலியனவும் மறையத் தலைப்படும். இந்த ஜுரம் கண்டவர்களில் அநேகமாய் ஐந்தில் ஒருவனுக்கே பிராணாபாயம் நேரிடுவதாகத் தெரிகிறது.

இது ஓர் ஒட்டுவாரொட்டி வியாதி. வசிக்கும் வீட்டில் போதிய சூர்ய வெளிச்சமின்மையாலும், ஜனநெருக்கம் அதிகமாயிருப்பதாலும், சுத்தமான காற்றோட்டம் இல்லாமையாலும், அழுக்கடைந்த வஸ்துக்கள் இருக்குமிடங்களில் சேருவதாலும், நடமாடுமிடம் ஈரமாயிருந்துவருவதாலும், அசுத்தமான பழக்க வழக்கங்களாலும் இந்த ஜுரத்திற்குக் காரணமான விஷம் உண்டாகி, மனித குடலில் அவ்விஷம் இடம் பெற்றுவிடுகிறது. இவ்வியாதி இருந்துவரும் இடத்தில் அடிக்கடியும் பழகுபவருக்குக்கூட இது தொற்றிக்கொள்ளக் கூடு

மாகையால், அவ்விடம் போகிறவர்கள், இவ்வியாதி பற்றிக் கொள்ளாதபடி முன் ஜாக்கிரதையோடு இருந்து வரவேண்டும்.

## சிகித்ஸை

நோய் ஆரம்பித்தது முதல் ரோகியை ஒரு தனி அறையில், வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ள இடத்தில் ஸௌகர்யமாக இருக்கச் செய்வது பொதுவாகக் கவனிக்கவேண்டிய விஷயங்களில் முதன்மையானது. நிசப்தமும் அமைதியும் வெகு அவசியம். பிணியாளியைப் பரிசோதித்து, இது ஸந்நிபாத ஜுரம் அல்லவென்பதை நன்கு தெரிந்து கொண்டபின், ஸைந்தவாதி க்வாதம்போன்ற மிருதுவான விரேசன (பேதி) மருந்தைக் கொடுத்து இரண்டொரு முறை மலம் வெளியாகும்படிச் செய்வது நலம். த்ரிவ்ருத் குடிகை என்கிற சுகபேதி மாத்திரையும் இந்நிலைமையில் கொடுக்கத் தகுந்தது. தலைநோயும் ஜுரமும் அதிகமாயிருக்கும்போது சீதாம்சு ரஸம் என்கிற ஔஷதத்தை ஏழெட்டு நெல்லெடை அளவில் இரண்டு மூன்று முறை தேனில் கலந்து உட்கொள்ளக் கொடுப்பதாலும், வெந்நீரில் துணியை நனைத்து, அதனால் உடம்பை அடிக்கடியும் நன்றாகத் துடைப்பதாலும் அவ்வேதனைகள் தணியும்.

இதில் முக்கியமாகச் செய்ய வேண்டிய சிகித்ஸை உடலிற் சேர்ந்துள்ள விஷத்தை வெளிப்படுத்துவதாகவும், அதே ஸமயத்தில் விஷவேகத்தினால் தேகத்தின் ஜீவசக்தி குறையாமல் சரீரத்திற்கும் முக்கியமாக இருதயத்திற்கும் பலம் அல்லது ஊக்கம் அளிக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இதற்கு ஷடங்கக்வாதம் என்கிற கஷாயத்துடன் சிறிது சீதாம்சுரஸத்தை மூன்று நான்கு மணிக்கு ஒரு முறையாகக் கொடுத்துவருவதும் அதன் பிறகு (வியர்வை விட்டு சிரோபாரம் குறைந்தபின்பு) ஸ்வச்சந்த பைரவம் என்கிற மாத்திரையை பஞ்சதிக்தரஸக்ரியா என்கிற மருந்துடன் கலந்து தினத்திற்கு நாலைந்து முறை கொடுத்து வருவதால் ஜுரவிஷம் தனது தீக்ஷ்ணத்தன்மையில் குறைந்து, பிணியாளியின் இருதயத்துக்கும் சிறிது சுறுசுறுப்பு ஏற்படும். முதல் வாரம் நெடுகவும் இவ்வித சிகித்ஸையைச் செய்து வருவதால், முற்கூறிய துர்க்குணங்கள் பலவற்றைத் தடுத்துவிடலாம்.

ஸந்நிபாத ஜுரத்தில் கவனிக்கப்படுவதுபோல் இதில் பத்திய விஷயத்தில் அவ்வளவு கண்டிப்பான முறை அவசியமில்லை. எளிதில் ஜீர்ணமாகக்கூடிய வாற்கோதுமை அல்லது கோதுமைக் கஞ்சி, பால், பழரஸம் முதலியவற்றை மாற்றி மாற்றி நோயாளிக்குக் கொடுத்து வர வேண்டும். வாந்தியும் குமட்டலும் இருந்தால் மாதுலுங்க ரஸாயனம் என்ற இனிய மருந்தில் சிறிதளவு அடிக்கடியும் கொடுத்து வந்தால், அவ்விகாரம் தணிவடையும்.

இரண்டு வாரங்கள் கழிந்து வியாதி தணிய ஆரம்பித்ததும், பஞ்ச திக்த ரஸக்கிரியா, மாதுலுங்க ரஸாயனம் இவ்விரண்டையும் மாற்றி மாற்றி ஒரு வாரம் கொடுத்து வருவது நலம். பிறகு தேகபலம் விருத்தியாவதற்கு லோஹரஸாயனம் என்ற ஔஷதத்தைச் சில நாள் உபயோகித்து வரலாம்.

---



சென்னை. பிரஸ் இன்பர்மேஷன் பீரோவைச் சேர்ந்த ஸ்ரீ ஆர். அருணாசலத்துக்கும், தஞ்சை ஜில்லா ஆலத்தூர் மிராசுதார் ஸ்ரீ ஜி. நாகமுத்து பிள்ளையின் சகோதரி ஸௌ. கனகாம்புஜத்துக்கும் சமீபத்தில் விவாஹம் நடைபெற்றது.

## எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப்பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக "வாரப்பதிப்பு" என்று எழுதியனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் விலாசமிட்ட தபால் கவர்களையோ, தபால் தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.



டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

மறுக்க முடியாத உண்மை !
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வேலைப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.




குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

ஸ்ரீ சாயிநாதய நம:

அனுபவத்துடனும், ஆராய்ச்சியுடனும் பலன்கள் சொல்லப்படும்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷ பலன் | ... ... ... ... | ரூ. 5. |
| விவரமான ஒரு கேள்விக்கு பலன் எழுத | | ,, 1. |
| விவாக பொருத்தம்பார்க்க | ... ... | ,, 3. |
| ஆயுள் பலன் எழுத | ... ... | ரூ. 100. |

THE SOUTH INDIAN ASTROLOGICAL BUREAU,
229, Walltax Road, Madras 3.

சுதா மோகன ரஞ்சிதம்
3-பாகங்கள் விலை ரூ. 2-8-0
தபாற் செலவு பிரத்யேகம்.
மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

இந்தியாவின் புகழ்




லோத்ரா
கர்ப்பாசய ரோக நிவாரணி
கேஸரி குடீரம் லிட்., மதராஸ்
EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா
ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பர்ஹாம்பூர்--செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்சு: மன்னார்குடி)

**சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

**வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்**

**பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு**

**முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.**

ஸோல் ஏஜெண்டுகள்:—

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,**
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

**B. Balapattabi Chettiyar,**
246, Vysyal St.,
**COIMBATORE.**



# உங்கள் எதிர்காலம்



பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

**வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,**

**Astrologer & Journalist, MADRAS 5.**



*Quality always tells!*

hence BUY **L.G** ASAFOETIDA

எல். ஜி பெருங்காயமே உயர்ந்தது








# சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



## காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

## ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.





எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.



# கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம், எரைப்பு, மூச்சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப் படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள் :

**சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,**
மைலாபூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

**என் ஸீ ஏஜன்ஸீஸ்,**
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS

Consult: **Dr. V. ராஜரத்னம்,**

For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address











Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" ... Victory House. Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.

Regd. No. 2514.

# “நம்பிக்கையே நாணயம் தரும்”

திட்டிமத்தி (தென்குடகு)

ஜனவரி 2, 1947.

நான் முதன் முதல் சில வைரங்களும் ரத்னங்களும் வாங்க நினைத்தபோது மனதிற்குள் ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்தது. ஏனெனில், ரத்னப்பரீட்சையில் தேர்ந்த நிபுணர் உதவியின்றி ரத்னங்கள் வாங்கினால் ஏமாற்றமடைய வேண்டுமென்பதாக ஓர் எணணம் வேரூன்றும்படி செய்துவிட்டனர் சிலர். ஆனால் உங்கள் விளம்பரத்தைப் பார்த்தபின் அவ்வெண்ணம் சிறிது மறைந்து தபால்மூலமாக உங்களிடம் ஓர் ஆர்டர் கொடுக்கத் துணிந்தேன். எனினும் கொஞ்சம் பயத்துடன்தான். இதுவரை உங்களுடன் நேரடியான தொடர்பு இல்லாததே காரணம்.

இப்பொழுது தங்களிடம் ஆர்டர் கொடுத்ததுபற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனக்குத் தேவையான நகைகளையும், உத்தேச மதிப்பு அளவையும் குறிப்பிட்டெழுதியவுடன் மூன்று நகைகள்–நெக்லஸ், பிரேஸ்லட், மோதிரம் அனுப்பியதைப் பெற்றுக்கொண்டு பூரண திருப்தியடைகிறேன். சிறந்த ரத்னங்கள் பதித்து அழகிய மோஸ்தர் வேலைப்பாடுள்ள இந்நகைகள் ஒன்றையொன்று தூக்கியடிக்கின்றது. இவ்வளவு சீக்கிரமாகவும் சிறப்பாகவும் ஆர்டர்களைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நான் முதலில் நினைக்கவேயில்லை,

உங்களைப்போன்ற கியாதிபெற்ற ஸ்தாபனங்களில் நேரடியாக வியாபாரம் செய்வதுதான் உத்தமம் என்பதை நான் திட்டமாகச் சொல்வேன். உங்கள் விளம்பரத்தில் குறிப்பிட்டிருப்பது அனைத்தும் உண்மை. சுலபமானதுடன் நம்பிக்கையானதும்.

வந்தனம்.

உங்கள் அன்பன்,

(ஒப்பம்) **N. சிட்டியப்பா.**

ருசுப்பிக்கப்பட்டது

# ஸூராஜ்மல்ஸ்

நம்பிக்கையான நகை வியாபாரிகள்

“1895 ௵ முதல்”

**313, எஸ்பிளனேட்,**
**மதருஸ்.**